

صوت المسلم

# முஸ்லிம் குரல்

මුස්ලිම් කුරල් MUSLIM KURAL

'சுயநிர்ணயத்துடன் கூடிய முஸ்லிம்களின் கௌரவமிக்க சமத்துவமான வாழ்விற்கு'

தருகை -20 ரூபா | 20 மே 2005 | 11 ரபீயுல் ஆகிர் 1426 | சுவடு- 61

மாதத்தில் மூன்று இதழ்கள் 1, 10, 20ம் திகதிகளில்...

# அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி அதிரடி முடிவுகளை எடுக்க ஜனாதிபதி முடிவு?

அரசாங்கத்தை முன்கொண்டு செல்வதில் எதிர்கொண்டு வரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதற்கு ஜனாதிபதி தயாராகி விட்டார் போல் தெரிகிறது. பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் ஆளும் தரப்புக்குள் எழுந்துள்ள பகிரங்கமானதும் பலமிக்கதுமான எதிர்ப்பினை சமாளிப்பதற்கான வழிவகைகள் குறித்து; அண்மைக்காலமாக ஜனாதிபதி தனது நெருங்கிய வட்டாரங்களுடன் தீவிரமான ஆலோசனையில் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது.

பொதுக் கட்டமைப்பை விடுதலைப் புலிகளுடன் இணைந்து உருவாக்குவதில் ஜனாதிபதி தொடர்ந்தும் உறுதியாக இருப்பதும்; பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுமென நிதி உதவி வழங்கும் மாநாட்டில் சர்வதேச சமூகத்திற்கு முன் ஜனாதிபதி வாக்குறுதி அளித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதியின் இத்தகைய நிலைப்பாட்டின் ஊடாகத்தான் முப்பதாயிரம் கோடி ரூபாவை ஜனாதிபதி நிதி உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து பெற்றுள்ளார்.

பொதுக்கட்டமைப்பு விவகாரத்தால் ஆளும் அரசாங்கம்; தனது ஸ்த்திரத்தன்மையை இழக்கும் அபாயக் கட்டத்தில் உள்ளது. பௌத்த சிங்களத் தேசியவாதிகளின் தீவிர எதிர்ப்பினை ஜனாதிபதியும் ஆளும் அரசாங்கமும் எதிர் கொள்ள வேண்டி வந்துள்ளது. இந்த விவகாரத்தில் தனது உயிரும்; தனது அரசியல் எதிர்காலமும்

## பாராளுமன்றத்தை இடைநிறுத்தி வைக்கவும் ஜனாதிபதி துணியலாம்?

கேள்விக்குள்ளாகி உள்ளதாக ஜனாதிபதியே தற்போது போகுமிடமெல்லாம் அழாக்குறையாக சொல்லிவருகிறார்.

இந்நிலையில் ஜனாதிபதிக்கு முன்னுள்ள ஒரேவழி; இலங்கையின் அரசியல் சாசனம் வழங்கியுள்ள நிறைவேற்று அதிகாரத்தினை ஈவிரக்கமின்றி பயன்படுத்துவதேயாகுமென அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். இத்தகைய வழிமுறையைப் பிரயோகிப்பதைத்தவிர ஜனாதிபதிக்கு எந்த மாற்று வழியும் இல்லை.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில்; அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி முப்படைகளின் துணையுடன்; நாட்டின் சட்டம் ஒழுங்கை கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதற்கான அதிகாரத்தினை ஜனாதிபதி பிரயோகிப்பதற்கு பெருமளவு வாய்ப்புள்ளதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். ஜனாதிபதியின் இத்தகைய செயற்பாட்டிற்கு. அமெரிக்கா. ஜப்பான். நோர்வே உட்பட மேற்கு நாடுகள் பலவும் தமது ஆதரவினை வழங்கக்கூடும்!

ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில்; பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்திவைப்பதற்கும் ஜனாதிபதி துணியலாம். நிலைமைகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததும்; தனது செயற்பாடுகளின் நியாயத்தன்மைகளை முன்னிறுத்தி சர்வஜன வாக்கெடுப்புக்கோ ஜனாதிபதித் தேர்தலுக்கோ அல்லது பாராளுமன்றத் தேர்தலுக்கோ ஜனாதிபதி மக்கள் முன் செல்லக்கூடும்!

ஜனாதிபதி எடுக்கவுள்ள அதிரடி அரசியல் முடிவுகள்; நாட்டில் பெரும் கொந்தளிப்பினையும்; இழப்புகளையும் ஏற்படுத்தக் கூடியதாக இன்றைய தென்னிலங்கை அரசியல் நிலைமை உள்ளது. இத்தகைய அதிரடி அதிகாரப் பிரயோகத்தை ஜனாதிபதி மேற்கொள்ளாது விட்டால்; ஓய்வுபெறுவதைத் தவிர ஜனாதிபதிக்கு வேறுவழியில்லை!

# ஜே.வி.பி.யின் நிலை என்ன?

(அரசியல் செய்தியாளர்)

சிங்கள பௌத்த தேசியவாதத்தின் பிரதிநிதிகளாகவுள்ள ஜே.வி.பி.யினரும். சிங்கள இனவாதிகளும் தற்போது அரசாங்கத்தின் முடிவுகளை ஒன்று சேர்ந்து எதிர்ப்பதற்கான ஐக்கிய முன்னணிக்கு தயாராகிவிட்டனர். இவர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தைகள் முடிவடைந்து விட்டதாகவும். ஜனாதிபதியின் முடிவுக்கு எதிராக கூட்டுச் சேர்ந்து செயற்படப் போவதாகவும் இவர்கள் உறுதியுரை எடுத்துள்ளனர்.



ஜே.வி.பி கடந்த பொதுத்தேர்தல் காலத்தை விடவும். சிங்கள மக்கள் மத்தியில் பலம் பொருந்திய அரசியல் இயக்கமாக செல்வாக்குப் பெற்றுள்ளதென ஜே.வி.பி. யின் தலைமை உறுதியாக நம்புகிறது. இலங்கை அரசியல் அரங்கில் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய இயக்கமொன்று நாட்டின் அதிகாரத்தை எதிர்காலத்தில் கைப்பற்றலாம் அல்லது பதவிக்கு வரும் அரசியல் தலைமைகளைக் கட்டுப்படுத்தி வழி நடத்தலாம் என நம்பிக்கை கொண்டுள்ளது.

இத்தகைய தமது வளர்ச்சிக்கு சிங்கள பௌத்த தேசியவாதக் கோஷம் பெருமளவு பக்கத்துணையாக இருந்துள்ளதை இவர்கள் நன்கு அறிவர். ஆகவே பௌத்த தேசியவாத நிலைப்பாட்டை மேலும் மேலும் முன்னெடுத்துச் செல்வதிலேயே தமது அதிகாரக் கைப்பற்றல் சாத்தியப்படுமென்பதில் ஜே.வி.பி. தலைமை தெளிவாக உள்ளது.

ஆகவே ஜனாதிபதியுடனும் மேற்குலகுடனும் சமரசம் பண்ணிப்போவதற்கு ஜே.வி.பி.க்கு எந்த அவசியமும் இன்று இல்லை. இந்தியாவின் ஆதரவுடன் நமது நிலைப்பாட்டில் முன்செல்ல ஜே.வி.பி தயாராகிவிட்டது. விளைவினை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!

## உள்ளே...

### உள்ளக சுயநிர்ணய உரிமையும் முஸ்லிம் மக்களும்

விடுதலைப் போராட்டம் என்பது போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே தேசிய உருவாக்கத்தையும் எடுத்துச் செல்ல வேண்டும். விடுதலைப் போராட்டம் என்பது ஓர் தேசிய உருவாக்கத்திற்கான போராட்டமாகும்.



07

மேல் மாகாணத்தில் 59 முஸ்லிம் பாடசாலைகள் இருக்கின்றன. அவற்றில் 20 முஸ்லிம் பாடசாலைகள் கொழும்பு மாவட்டத்தில் மட்டும் இருக்கின்றன. இந்தப் பாடசாலைகளுக்கு எந்த முஸ்லிம் அரசியல் தலைமைகளோ, அமைச்சர்களோ போதியளவு பௌதீக வளங்களை பெற்றுக்கொடுக்கவில்லை என்பது தான் உண்மை!

09



சட்டத்தரணி ஏ.எம். ஜிப்ரி

### முஸ்லிம் சமாதான செயலகம் நீடித்து நிற்குமா?

13



**இலங்கை முஸ்லிம்களின் சொந்தக் குரல்! சமூக சமத்துவத்திற்கான குரல்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உஸ்பெகிஸ்தான் நகரமொன்று தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் வந்துள்ளது!




தீவிரவாத இஸ்லாமிய அமைப்பொன்று, கடந்த புதன்கிழமை உஸ்பெகிஸ்தானிலுள்ள, ஆக்பிகான் நகரை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளதாக அறிவித்துள்ளது. இந்நகரின் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைக்கப்பட்டிருந்த சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 2000க்கும் மேற்பட்டோரையும் விடுவித்து, நகரின் முக்கிய பகுதிகளை கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்துள்ளதாக இவ்வமைப்பு அறிவித்துள்ளது.

தற்போது இந்நகரம் யாரின் கட்டுப்பாட்டில் உள்ளது என தமக்கு உறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது என மனித உரிமைக்கான அமைப்பின் பேச்சாளர் ஃபாயிட் ஜொஹான் சர்வதேச ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். பழைய சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்த உஸ்பெகிஸ்தானில் இஸ்லாமிய அரசை நிறுவுவதற்கு போராடிவரும் இஸ்லாமியத் தீவிரவாதக் குழுவே உஸ்பெகிஸ்தானில் நகரொன்றை கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.


## புலிகளிடமிருந்து தப்பி வந்துள்ள வாலிபர்!

புலிக்ளின் பயிற்சி முகாமிலிருந்து தப்பியோடி வந்த இளைஞர் ஒருவர் கடற்படையினரிடம் சரணடைந்துள்ளார். உப்புவெளிப் பிரதேசத்தைச் சேர்ந்த இவர், புலிகளின் சம்பூர் இராணுவப் பயிற்சி முகாமிலிருந்து தப்பி வந்ததாகவும், தாம் கடந்த மார்ச் 28 ஆம் திகதி புலிகளினால் கடத்திச் செல்லப்பட்டதாகவும் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

இராணுவ பயிற்சிக்கு தான் உடன்படாததால், தன்னைப் புலிகள் விலங்கிட்டு தடுத்து வைத்திருந்ததாகவும்; தன்னைப் போல் தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவருடன், கடலை நீந்திக் கடக்கும் திட்டத்துடன் தப்பி வர முயற்சித்ததாகவும், கிட்டத்தட்ட 1 தொடக்கம் 1 1/2 கிலோ மீற்றர் வரை அவர்களுக்கு தான் உதவிபுரிந்து கடலில் அழைத்து வந்ததாகவும், மற்ற இருவருக்கும் நீச்சல் தெரியாத காரணத்தினால் அவர்களுக்கு என்ன நடந்தது என தனக்கு தெரியவில்லை எனவும் கடற்படையினரிடம் இவ்விளைஞர் தெரிவித்துள்ளார்.

கடற்படையினர் திருமலை துறைமுகப் பொலிசாரிடம், இவ்விளைஞரை ஒப்படைத்துள்ளதுடன், இதுபற்றிய மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.


## புனித அல்குர்ஆனை அவமதித்ததன் காரணமாக ஆப்கானில் எதிர்ப்பு!



அமெரிக்க சிறைச்சாலையில் அல்குர்ஆனை அவமதித்ததன் நிமித்தம் ஆப்கானிஸ்தானில் ஜலாலாபாத் நகர் புரத்தில் மாபெரும் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது. பேரணியை நிறுத்த பெருந்தொகையான இராணுவத்தினரும், பொலிசாரும் அங்கு குவிக்கப்பட்டிருந்தாலும், மக்களால் எதிர்ப்பு ஊர்வலம் மிகவும் வலுவாக நடத்தப்பட்டுக்கொண்டிருந்தது. ஆவேசமாக முன்னேறிக்கொண்டிருந்த மக்களை தடுப்பதற்காக ஆப்கான் கூலி ராணுவம் மக்கள் மீது ஆயுத பிரயோகம் செய்தன. அதன்போது நான்கு பேர் பலியானதுடன் 70பேர் படுகாயம் அடைந்தனர்.

அதன் பிறகு நடந்த கைகலப்பில், ஆறு பொலிசார் காயமுற்றதுடன்; அரச, அரச சார்பற்ற 20 நிறுவனங்கள் சேதத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளன. மேலும், மேற்படி சம்பவத்தால் கோபமுற்ற மக்களால் பாகிஸ்தான் தூதரகம், பிறநாட்டு நிறுவனங்களும் சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகளுக்கான ஸ்தாபனத்தின் ஊழியர்களுக்கான இரண்டு வதிவிட மண்டபங்கள் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளன. தேவைக்கு மேலதிகமாக உள்ள ஊழியர்கள் வேறு இடங்களுக்கு இட மாற்றப்பட்டுள்ளனர்.

# ரணில் சிங்கப்பூருக்கு சென்றது புலிகள் பிரதிநிதிகளை சந்திப்பதற்காகவா?



ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் புலிகள் இயக்கத்தின் விசேட பிரதிநிதிகள் குழுவொன்றைச் சந்திப்பதற்கு அவசரமாக சிங்கப்பூர் சென்றதாக ஐ.தே.கட்சியின் உள்ளக வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. அங்கு சென்ற ரணில் விக்ரமசிங்க புலிகள் இயக்கத்தின் உயர் மட்டப் பிரதிநிதிகள் குழுவொன்றை சந்தித்ததாக ஐ.தே.கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு கிழக்கில் உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்பு பற்றி கலந்தாலோசிக்க ரணில் விக்ரமசிங்கவிற்கு ஜனாதிபதி விடுத்த அழைப்பை அவர் நிராகரிந்தமை தெரிந்ததே. இதனால் ரணில் விக்ரமசிங்க மீது புலிகள் இயக்கம் தனது கண்டனத்தை தெரிவித்திருந்தது. இதனால் ஐ.தே.கட்சிக்கும் புலிகள் இயக்கத்திற்குமிடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் பற்றி ரணில் விக்ரமசிங்க புலிகளின உயர்மட்ட பிரதிநிதிகள் குழுவிடம் கலந்தாலோசித்ததாகவும் தெரியவருகின்றன.

## விரைவில் அரசியல் சாசன திருத்தங்கள்!

ஜனாதிபதியின் ஆலோசனையின் கீழ் எதிர்வரும் இரு மாதங்களுக்குள் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்கு அரசியல் சாசனத்தில் பல்வேறு புதிய திருத்தங்களை தயார்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி மாளிகை வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு வழங்குதல், அமைச்சரவை தெரிவின் போது பிரதமரின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளல், ஜனாதிபதியை நீதிமன்றத்துக்கு முன்கொண்டு வருதல் உட்பட தற்போது உள்ள தேர்தல்முறைமையை திருத்தவதற்கான புதிய யோசனைகளும் புதிய அரசியல் திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. தேர்தல் முறைமையைத் திருத்துவதற்காக கொண்டுவரவுள்ள சட்டத்தால் பழைய தொகுதி முறையையும், விகிதாசார முறைமையையும் கலந்து பிரதிநிதித்துவம் செய்கின்ற முறையை அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

# ஜனாதிபதிக்கு கையொப்பமிட்டு உறுதி வழங்கியுள்ள முஸ்லிம் பிரதிநிதிகள்!

ஜனாதிபதியின் அனைத்து முயற்சிகளையும் ஆதரிப்பதாகவும், அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக எந்தக் கருத்தினையும் தெரிவிப்பதில்லையெனவும், ஜனாதிபதியின் வேண்டுதலின் பேரில், மேற்கூறப்பட்ட ஆவணத்தில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் பிரதிநிதிகள் அனைவரும் கையொப்பமிட்டுள்ளதாக தெரியவருகிறது!

கடந்த வாரம் அவசர அவசரமாக ஜனாதிபதி மாளிகைக்கு அழைக்கப்பட்ட ஆளும்தரப்பு முஸ்லிம் பிரதிநிதிகளிட்ம் தனித்தனியாக ஜனாதிபதியினால் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் இவர்களுக்கு பல்வேறு வசதிகள் வழங்கப்படுமென ஜனாதிபதியால் உறுதியளிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மாளிகைக்கு இவர்கள் அழைக்கப்பட்ட சமயம், சேகு இஸ்ஸதீன் மாத்திரம் வெளிநாடு சென்றிருந்தார், சேகு இஸ்ஸதீன் நாடு திரும்பியவுடன் அவரிடமும் கையொப்பத்தை ஜனாதிபதி பெற்றுள்ளதாக விசயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கையொப்பமிட்டுவிட்டு வெளியில்வந்த சில முஸ்லிம் பிரதிநிதிகள் தமது இக்கட்டான நிலைகுறித்து அதிகம் கவலைப்பட்டதாகவும் பிரதிநிதிகள் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பருவமெய்திய
மங்கைகள் இங்கே
சீதனச் சிறைக்குள்
கைதியானார்கள்
குற்றமின்றி...




திருமணச் சந்தையில்
விற்பனையாகாத
பண்டங்களாய்
காலாவதியாகும்
மாதுகள்...

பெண்ணாய்ப் பிறப்பது
பாவமன்றோ...?

ஏறாவூர் இ. நஸீம்


### முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்!

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகைகளை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாகச் சேருங்கள்! சகோதர, சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

பணத்தை காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசோலை அனுப்புவதாக இருந்தால் Muslim Kural Publication and Printers எனக் குறிப்பிடவும். காசுக் கட்டளையாக இருப்பின் Muslim Kural Publication and Printers, Wellampitiya என அவசியமாகக் குறிப்பிடவும்.

சந்தா விபரம்:
3 மாதங்கள் - (12 இதழ்கள்) 200/-
6 மாதங்கள் - (24 இதழ்கள்) 400/-
1 வருடம் - (48 இதழ்கள்) 800/-

தொடர்புகளுக்கு:
119/15, Viviyan Gunawardena,
Mawatha (Kettampahuwa Road)
Wellampitiya.
Phone : 077 3131627

(பிரதிகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுக் கட்டமைப்பும் அரசியல் நெருக்கடியும்

பாதுஷா

கடற்கோள் அனர்த்தம் நிகழ்ந்து ஐந்து மாதங்களை எட்டிவிடப்போகிறது. கடற்கோளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்பும் பணியானது; இன்று இலங்கை அரசியலில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இத்தகைய புனரமைப்பு பணியானது வெறுமனே அபிவிருத்தி, மீள் கட்டுமானப் பணி என்கிற எல்லையையும் தாண்டி, தேசிய

தேசத்துடன், தமது அரசியல் நிலைப்பாடுகளை தமிழர் தரப்பு பேசிவருகின்றது. வடக்குக் கிழக்கு பிராந்தியத்தில் தமிழர்களுக்கு ஒற்றையாட்சியின் இறைமையைப் பாதிக்காத வகையில் தமது பிரதேசங்களை நிர்வகிக்கக் கூடிய அதிகாரத்தை வழங்க வேண்டுமென சர்வதேச சமூகம் இலங்கை

அரசாங்கத்தின் 2005/2006 வரவு செலவுத்திட்டத்தை அமுல்படுத்துவதற்குக் கூட, வெளிநாட்டு அரசுகளின், சர்வதேச நாணய நிதியத்தின், உலக வங்கியின் நிதிக் கடனளிப்பு பிரதானமாகத் தேவைப்படுகிறது. இத்தகைய சவாலின் மத்தியில் தான் கண்டியில் நிதியுதவி வழங்கும் நாடுகளின் மாநாடு

நடைபெற்றது கடற்கோளினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இந்தோனேசியாவுக்கு அடுத்த பெருமளவு இழப்பினை சந்தித்த நாடாக இலங்கை உள்ளது.

அரசாங்கத்தை வற்புறுத்தி வந்த சூழலில்தான் இலங்கையின் கரையோரப் பிரதேசத்தை கடற்பேரலை அனர்த்தம்





காவு கொண்டது.வரலாற்று வழியில் ஏலவே, நீதி வழங்க முடியாதவர்கள் என அடையாளப் படுத்தப்பட்டு விட்ட சிங்கள அரசுத் தலைமைகளால், கடற்கோளினால் மிகமோசமான பாதிப்பைக் கண்ட வடக்கு கிழக்கு பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்காது என அனைவரும் நம்புகின்றனர். அத்துடன் விடுதலைப் புலிகளை யுத்தத்திற்குள் பிரவேசிக்காமல், சமாதானப் பொறிக்குள் தொடர்ந்தும் அகப்படுத்தி வைப்பதற்கும் பொதுக்கட்டமைப்பை ஒரு பொறியாக அமெரிக்கா, ஜப்பான், நோர்வே போன்ற நாடுகள் இப்போது கையாளத் தொடங்கி விட்டது.

இனங்களின் இருப்புடனும், அவர்களது அரசியல் நிலைப்பாடுகளுடனும் சம்பந்தப்பட்ட அரசியல் விடயமாக மாறிவிட்டது.

இந்த நிலையை ஏற்படுத்தியது இலங்கையின் ஆட்சி அதிகாரத்திலிருந்த சிங்கள பௌத்த அரசியல் தலைமைகள்தான் என்பதில் எமக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. சுதந்திரத்தின் பின், இலங்கையை ஆட்சி செய்த பௌத்த பேரினவாத அரசுத் தலைமைகள் தேசிய வளங்களை பகிர்ந்தளிப்பதும், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பதிலும் காட்டிய மிகமோசமான புறக்கணிப்பும் பாராபட்சமும் தமிழ் மக்களை நியாயம் கேட்டு போராட வைத்தது.

கணிசமான தமிழ் மக்களுக்கு சிங்கள பௌத்த அரசுத் தலைமைகள், தமக்கு நீதி வழங்கும் என்பதில் நம்பிக்கையற்றுப் போய் வெகுகாலமாகி விட்டது! இந்த உண்மையை பல்வேறு தடவைகளில் காலத்திற்கு காலம் பதவிக்கு வரும் சிங்கள அரசுத் தலைவர்களில் பலர் ஏற்றுமிருக்கின்றனர். இத்தகைய பாராபட்சத்தையும் புறக்கணிப்பையும் செய்திருக்கக் கூடாது என திருவாய் மலர்ந்திருக்கின்றனர். ஆனால் இவர்களது இத்தகைய மன உணர்வுகளை, செயல் ரீதியாக நிரூபணம் செய்வதற்கு இத்தலைமைகளால் முடியாது போனமையே இலங்கையின் இனத்துவ வரலாற்றின் சோக முடிவாக அமைந்துள்ளது.

இந்த நிலையில், வடக்கு கிழக்குப் பிரதேசத்தை ஆள்புல எல்லையாகக் கொண்டு, அரசு ஒன்றை அமைப்பதற்கான போராட்டத்தை தமிழர் தரப்பு முன்னெடுத்துவருகிறது. சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் சிங்களத்

**ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை உள்நாட்டில் அக்கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. அரசியல் கூட்டுக்கு எதிரான அரசியல் சக்தியாக இருந்தபோதிலும், மேற்கின் அரசியல் காய் நகர்த்தலுக்குள், அதன் வேலைத்திட்டத்திற்குள் ஏலவே உள்வாங்கப்பட்ட கட்சியாக உள்ளதால், பொதுக்கட்டமைப்பு விடயத்திலோ, விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை விடயத்திலோ அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியை ஒருபோதும் மேற்கு நாடுகள் அனுமதிக்கப்போவதில்லை, இது தான் உண்மை.**

பாரிஸிலும், டோக்கியோவிலும் நிகழ்ந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டங்களில், இலங்கைக்கு நிதியுதவி வழங்கப்படுவதாக இருந்தால், அந்த நிதியுதவிகள், இலங்கையின் சமாதான முயற்சிகளையொட்டியே வழங்கப்படுமென நிதி வழங்கும் நாடுகள் அறிவித்திருந்தன. இந்த நிபந்தனையுடனேயே அந்நாடுகள் இன்றும் தமது காய்நகர்த்தல்களை மேற்கொண்டு வருகிறதை நாம் காணலாம்!

இலங்கை அரசாங்கமானது, வெளிநாட்டு நிதியுதவிகள் இன்றி அரச இயந்திரத்தை முன்னகர்த்த முடியாது திணறுகின்றது.



சந்திரிகாவின் அரசாங்கத்தைப் பொறுத்தவரை அரச இயந்திரத்தை முன்னகர்த்த வேண்டுமானால், வெளிநாட்டு நிதியுதவி இன்றியமையாத பிரதான அம்சமாகிவிட்டது. அதனால்தான் அம்மையார், தனது அரசியல் கூட்டுச் சகபாடியான ஜே.வி.பியைக் கூட கணக்கில் எடுக்காமல், தான் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு பாவித்த அரசியல் அஸ்திரத்தைக் கூட கடாசி வீசிவிட்டு, பொதுக்கட்டமைப்பு அரசியல் வலைக்குள் விழ வேண்டியவராகிவிட்டார்! புலிகளுக்கு அதிகாரம் வழங்கப்படவேண்டுமென சொல்வதற்கும் தயாராகி விட்டார்!

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை உள்நாட்டில் அக்கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. அரசியல் கூட்டுக்கு எதிரான அரசியல் சக்தியாக இருந்தபோதிலும், மேற்கின் அரசியல் காய் நகர்த்தலுக்குள், அதன் வேலைத்திட்டத்திற்குள் ஏலவே உள்வாங்கப்பட்ட கட்சியாக உள்ளதால், பொதுக்கட்டமைப்பு விடயத்திலோ, விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை விடயத்திலோ அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியை ஒருபோதும் மேற்கு நாடுகள் அனுமதிக்கப்போவதில்லை. இது தான் உண்மை.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவிற்கும், ரணில் விக்ரமசிங்காவிற்கும் இடையிலான அதிகாரப் போட்டியை எப்படித் தவிர்த்து, இருவரையும் பாதுகாத்து நிலைநிறுத்துவதற்கான வழிவகைகளை மேற்கு நாடுகள் முன்வைக்கும் போது, தமது அதிகார நலன்களுக்கு உத்தரவாதம் வழங்கப்படுமானால் சந்திரிகாவும் ரணிலும் மேற்கூறப்பட்ட அம்சங்களில் இணைந்தே பணியாற்ற முன்வருவார்கள்! ஜே.வி.பியை அதிகார மையத்திலிருந்து அகற்றுவதற்கு இதனைத் தவிர வேறு எந்த மாற்றுவழியும் இரு கட்சித் தலைமைகளுக்கும் இல்லை. மேற்கு இதனைத்தான் செய்யவும் போகிறது!

இத்தகைய காய்நகர்த்தலில் முஸ்லிம்கள் என்ன செய்யப்போகிறார்கள்? முஸ்லிம்களால் என்ன செய்ய முடியும்? என்பதனை முஸ்லிம்கள்தான் நிரூபிக்க வேண்டும். உள்நாட்டு அதிகார ஆதிக்க சக்திகளுக்கு எதிராக மட்டுமல்லாமல் சர்வதேச ஆதிக்க சக்திகளுக்கு எதிராகவும் பணியாற்ற வேண்டிய தேவை இன்று இலங்கை முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ளது! ■

# முஸ்லிம் காங்கிரஸ் ஏன் போராடாமல் இருக்கிறது?



பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம் சமூகம் புறக்கணிக்கப்படுவதாக குரல் எழுப்பும் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை இப்பொதுக் கட்டமைப்பு, விவகாரத்திற்கு எதிராக முஸ்லிம் மக்களைத் திரட்டி ஏன் ஒரு வெகுஜனப் போராட்டத்தையாவது இதுவரை நடாத்தவில்லையென மக்கள் கேட்கின்றனர்! முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், அண்மையில் பேசியபோது, முஸ்லிம் சமூகம் புறக்கணிக்கப்படும்போது முஸ்லிம் காங்கிரஸ் தலைமை வீணே கையைக் கட்டிக்கொண்டு பார்த்திருப்பதற்கு வெறும் முட்டாள்களல்ல எனத் தெரிவித்திருந்தார்! கடந்த அரசாங்க காலத்தில் முஸ்லிம் சமூகம் யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடக்கம் பேச்சுவார்த்தை மேசை வரை புறக்கணிக்கப்பட்டபோது முஸ்லிம் காங்கிரஸ் கையைக்கட்டிக்கொண்டு, அமைச்சர் பதவிகளில் ஒட்டிக்கொண்டிருந்ததை இவ்வளவு சீக்கிரத்தில் நமது மக்கள் மறந்திருப்பார்கள் என மு.கா. தலைமை கற்பனை செய்யக் கூடாது! அப்படியானால் இன்று எதிர்க்கட்சியிலிருக்கும் போதாவது ஏன் இவர்களால் போராட முடியாமல் இருக்கிறது?

முஸ்லிம் சமூகத்தின் பெருமளவிலான மக்களின் ஆதரவு தமது கட்சிக்கு இருக்கின்றது என்றும், முஸ்லிம்களுக்கு குரல் கொடுப்பதற்கு முஸ்லிம்காங்கிரசைத் தவிர வேறு கட்சிகள் இல்லையெனவும், தற்போது ஒவ்வொரு மேடைகளிலும் பேசிவரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை தற்போது எழுந்துள்ள சூழ்நிலையில், முஸ்லிம் மக்களின் அரசியல் உணர்வுகளையும் நிலைப்பாடுகளையும் முன்வைத்து வெகுஜனப் போராட்டங்களை ஏன்நடத்தவில்லை என்பதும், முஸ்லிம்களைப் பாதிக்கின்ற விடயங்களை தடுத்து நிறுத்துவதற்கான உறுதியான அரசியல் வேலைத்திட்டத்தை ஏன் முன்னெடுக்கவில்லை எனவும் எமக்கு எழும் கேள்விகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைமை தெளிவான பதிலை அளிக்க வேண்டும். அல்லது செயற்பாட்டில் தமது நிலைப்பாடுகளை நிரூபிக்க வேண்டும். மு.கா. தலைமை தன்னை நிரூபிக்குமா? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வரலாற்றுத் தொடர்

# தமிழர் அரசியல் போராட்டம்

**சி. புஷ்பராஜா எழுதுவது...**

**இத்தொடர் தமிழர் அரசியலில் ஒரு முக்கியமான பதிவாகும்: தமிழர் அரசியல் போராட்டத்தின் பல்வேறு காலகட்டங்களையும் அதன் அரசியல் போக்கையும் நமக்கு மிகத் தெளிவாக முன்வைக்கிறது.**

**தமிழர் அரசியலில் மிதவாத தமிழ் அரசியல் தலைவர்களின் பாத்திரம்,ஏனு அவர்களின் பங்களிப்பு பலம் பலவீனங்களுக்கு ஊடாகவும்; தீவிரவாத இயக்கங்களின் தோற்றத்தையும் நாம் அறிந்துகொள்ள இத்தொடர் நமக்கு அதிகளவில் துணைபுரியும்!**

**தமிழர் மிதவாத அரசியல் தலைமைகள் செய்த வரலாற்று பாத்திரத்தையாவது நமது முஸ்லிம் அரசியல் தலைமைகள் செய்யவில்லை என்பதை இத்தொடர் வாசித்தறியும் போது நாம் கண்டுகொள்ளலாம்!**

இறுதிவரை தலைமையில் மாற்றம் இருக்கவில்லை. தமிழ் இளைஞர் பேரவையில் இருந்து வெளியேறியபோதும்கூட தலைமைக்குழுவிலிருந்த அனைவரும் ஒற்றுமையாக வெளியேறினோம். தமிழ் இளைஞர் பேரவையின் மௌன ஊர்வலத்துக்கான வேலைகளில் முழுமூச்சாக ஈடுபட்டோம். இந்த ஊர்வலத்துடன் மகளிர் அமைப்பைக் கட்டி வளர்க்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தேன். இதன் பொருட்டுக் கல்லூரி மாணவிகள், பெண்கள் மத்தியில் இடைவிடாது சந்திப்புக்களையும் உரையாடல்களையும் மேற்கொண்டோம். குருநகர் குலமக்கா, அவரது மகள் கல்யாணி, மயிலிட்டி புஸ்பராணி ஆகியவர்கள் எங்களுடன் இணைந்து கொண்டனர். சங்கானை அம்மா, காரைநகர் கனகராணி, காங்கேசன்துறை திலகமணி, காங்கேசன்துறை டொக்டர் தேவநாயகி, கொழும்பு ஆனந்தராணி, திருகோணமலை லோரன்ஸ் அக்கா, மட்டக்களப்பு கலா தம்பிமுத்து, மாவிட்டபுரம் பத்மினி சுப்ரமணியம், மயிலிட்டி அங்கயற்கண்ணி, அளவெட்டி தேவராணி போன்ற பெண்கள் பிற்காலத்தில் எம்முடன் இணைந்து எமது வளர்ச்சியிலும்; ஈழப்போராட்ட வரலாற்றிலும் பங்கெடுத்துக் கொண்டனர். இவர்களில் புஸ்பராணியும் கல்யாணியும், ஈழப்போராட்ட வரலாற்றில் வன்முறைக்குத் துணைபோய் சிறைசென்ற முதல் பெண்களாகும்.

தமிழ் இளைஞர் பேரவையால் நடாத்தப்படும் மௌன ஊர்வலம் தடுத்து நிறுத்தப்படும் எனவும், யாழ் மாநகர எல்லைக்குள் இந்த ஊர்வலத்தை வரவிடமாட்டேன் எனவும், வன்முறையைப் பயன்படுத்தியாவது இதைத் தடுப்பேன் எனவம் யாம் மேயர் அல்பிரட் துரையப்பா அப்போது அனைத்துத் தமிழ்ப் பத்திரிகைகளிலும் செய்தி வெளியிட்டிருந்தார். இச்செய்தியைப் படித்ததும் நாம் சீற்றம் கொண்டோம். திட்டமிட்டதை விடத் திறமையாக ஊர்வலத்தை நடாத்துவதென முடிவெடுத்தேன். எந்தவிதமான வன்முறைகளையும் சந்திப்பதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்கென




தனியான குழுவை நியமித்தேன். இக்குழுவில் குருநகர் எட்வின், குருநகர் ரஞ்சித், கொழும்புத்துறை தியாகராசா, காங்கேசன்துறை திலகதாசன், வல்வெட்டித்துறை பட்டண்ணா, காங்கேசன்துறை அப்பன் போன்றவர்கள் நியமிக்கப்பட்டது நினைவிருக்கிறது. இவர்களுக்கு உதவியாக வேறு சில இளைஞர்களையும் தயார்படுத்தினேன். இவர்கள் ஊர்வலத்தின் முன்னும் பின்னும் வருவதெனவும் வெளியே இருந்து வரும் எந்த வன்முறைக்கும் உடனடியாகப் பதில் கொடுக்கத் தயார் நிலையில் இருக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொன்டேன். அன்றைய காலகட்டத்தில் துரையப்பாவின் அனைத்து நடவடிக்கைகளும் தமிழ் மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்துவதாகவிருந்தது.

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத்தெருவில் 1971ம் ஆண்டு மார்ச் 11ம் திகதி துரையப்பாவுக்கு இலக்கு வைத்து அவரின் காரில் வைக்கப்பட்ட குண்டு, நேரம் முந்தி வெடித்ததால் துரையப்பா உயிர் தப்பினார். இதில் சம்பந்தப்பட்ட உரும்பிராய் சிவகுமாரனை ஆரம்பகாலம் முதலே எனக்குத் தெரியும். யாழ்ப்பாணம், அனுராதபுரம் சிறைகளில் சிவகுமாரன் இருந்தார். ஊர்வலம் சம்பந்தமாக துரையப்பாவின் செய்தியைப் பத்திரிகைகளில் கண்ட சிவகுமாரன் உடனே என்னை வந்து சந்தித்தார். அப்பொழுது பிரான்சிஸ் என்னுடன் இருந்தார். ஊர்வலத்தை திட்டமிட்டபடி நடாத்தும்படியும், தான் ஊர்வலத்தில் துணையாக வருவதாகவும் எது நடந்தாலும் சமாளிக்கலாம் எனவும் கூறினார். நாங்கள் செய்திருக்கும் ஏற்பாடுகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி அவரிடம் கூறினேன். தன்னிடம் 'றிவோல்வர்' இருப்பதால், அது கூடுதல் பலம் என ஒரு றிவோல்வரை எடுத்துக் காட்டினார்(அது கலிபர் 38 ரக றிவோல்வர்). றிவோல்வரைக் கண்ட எமக்குத் தலைகால் புரியாத சந்தோசமும் உற்சாகமும் ஏற்பட்டது. அந்த நாட்களில் ஒரு றிவோல்வர் கிடைப்பதென்றால் என்னபாடுபட வேண்டும் என்பது பிரபாகரனுக்குக்கூடத் தெரிந்த உண்மையாகும்.

ஊர்வலம் நடாத்துவதற்கான நாளும் வந்தது. ஊர்வலம் தொடங்குவதற்கு சிறிது நேரம் இருக்கையில் தமிழர் கூட்டணியின் முக்கிய தலைவர்கள் வந்து இறங்கியதைக் கண்டு நாம் திகைப்புற்றோம். 'தமிழ் இளைஞர் பேரவையின் ஊர்வலத்தில் இவர்களுக்கு என்ன வேலை?' என்ற கேள்வி எனது மனதில் தோன்றியது. அ.அமிர்தலிங்கம், மு.சிவசிதம்பரம், ஆ.குமரகுரு, வி.தர்மலிங்கம், மங்கையற்கரசி அமிர்தலிங்கம் போன்றவர்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து சேர்ந்தனர்.

இவர்கள் ஊர்வலத்தில் பங்குபற்றுவதனால் வரும் சிக்கல்களை உணர்ந்த நான் அவர்களை அணுகி, அன்புரீதியாக எனது தர்மசங்கடத்தை விளக்கினேன். துரையப்பாவின் சவாலிற்குச் சவாலாகவே தாங்களும் ஊர்வலத்தில் பங்குபற்ற வந்திருப்பதாகவும், தாங்கள் ஊர்வலத்திற்கு முன்பாக தனியான குழுவாகச் செல்வதாகவும், தமிழ் இளைஞர் பேரவையின் பெயர் தாங்கிய பதாதைகள் (banner) தங்களுக்குப்பின் கொண்டு வரலாம் எனவும் அமிர்தலிங்கம் கூறினார். இதில் தவறில்லை என்பதால் அனைவரும் ஒப்புக்கொண்டு ஊார்வலம் நடாத்தப்பட்டது. இந்த ஊர்வலத்துக்கு வந்திருந்த அமிர்தலிங்கத்தின் மகன் காண்டீபன் எங்களுடன் சேர்ந்து வேலை செய்யத் தனக்கு இருக்கும் விருப்பத்தைத் தெரிவித்தார்.

(தொடரும்...)

# முஸ்லிம் தேசம் கோரிக்கைக்கு நாங்கள் தானாக முன் வரவில்லை!

**தென்கிழக்குப் பல்கலைக்கழகப் கலைப் பீடாதிபதி எம்.ஏ. கலீல்**

வடகிழக்கில் தமிழர்களும், முஸ்லிம்களும் ஒன்றிணைந்து வாழ்ந்ததனால் தமிழ்ப் பண்பாடு முஸ்லிம்கள் மீதும், முஸ்லிம்களது பண்பாடு- தமிழ்ப் பண்பாட்டின் மீதும் செல்வாக்குச் செலுத்தியது. இச்செல்வாக்கு முஸ்லிம்களது தனித்துவத்தை சிதைக்கவில்லை. அதற்கான வலுவான சான்றாதாரம் அவர்கள் பின்பற்றும் இஸ்லாமிய மதம் அல்லது சமயமாகும். சிங்கள பேரினவாத தேசியவாதம், தமிழ் தேசியவாதத்தை அடக்க முற்பட்டபோது தமிழ் தேசியவாதம் எழுச்சி பெற்றது. அதேபோன்று தமிழ் தேசியவாதம் முஸ்லிம் தேசத்தை நசுக்க முற்பட்ட போது முஸ்லிம் தேசிய எழுச்சி பெறுகிறது. இவ்வாறு சம்மாந்துறை நகர மண்டபத்தில் முஸ்லிம்தேச மன்றத்தினால் வெளியீடு செய்யப்பட்ட குமுறல் பத்திரிகையின் வெளியீட்டு விழாவில் அதிதியாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய தென் கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாச்சார பீட-பீடாதிபதி எம்.ஏ. கலீல் தெரிவித்தார்.

இவ்வெளியீட்டு விழா முஸ்லிம்தேச மன்றத் தலைவர் எம்.எல்.எம் . முஜாஹித் தலைமையில் இடம்பெற்றது. அங்கு



தொடர்ந்தும் உரையாற்றிய பீடாதிபதி கலீல்; 'முஸ்லிம்தேசம் குறித்து பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள், ஆய்வுகள் என பல்வேறு நடவடிக்கைகள் இடம் பெற்றுவருவதை எங்களால் அறிய முடிகிறது. அந்த வகையில் விக்டர் எழுதிய முஸ்லிம் தேசமும் எதிர்காலமும் என்ற நூல் முக்கியத்துவமிக்கது. ஆனாலும் முஸ்லிம் தேசம் பற்றிய எழுத்துக்களினதும், ஆய்வுகளினதும் தேவை மிகப்பரந்த அளவில் எதிர்பார்க்கப்படுகிறது. அந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வதில் முஸ்லிம்தேசம் எனும் மன்றத்தினரின் குமுறல் பத்திரிகை முக்கிய பங்காற்றும் என எதிர்பார்க்கின்றேன்.

இப் பத்திரிகை முஸ்லிம் 'தேசம்' பற்றியும் முஸ்லிம் சார் பிரச்சினைகள் பற்றியும் தெட்டத்தெளிவான கருத்துக்களை முன்வைக்கிறது. தேசம் என்பது பொதுவான அரசியல் உணர்வினால் பிணைக்கப்பட்ட பண்பாட்டு அம்சங்களை தனித்துவமாக கொண்ட ஒரு மக்கள் கூட்டமாகும். முஸ்லிம்தேசம் பற்றிய கோரிக்கைக்கு நாங்கள் தானாக முன்வரவில்லை. பெரும்பான்மை சமூகங்கள் எங்கள் மீது மேற்கொண்ட அடக்கு முறையின் விளைவே எங்களின் கோரிக்கைக்கு காரணமாகும்.

எனவே எங்களின் பாதுகாப்பு, சுயநிர்ணய உரிமையும், வாழ்வாதார உரிமைகளும் யாப்பு ரீதியாக உத்தரவாதப் படுத்தப்படுவதன் மூலமும், இன முரண்பாட்டுத்தீர்வில் சம்பங்காளிகளாக இணைக்கப்படுவதன் மூலமும், பலவிட்டுக் கொடுப்புகளை நாங்கள் செய்ய முடியும்.

இவ்வெளியீட்டு விழாவில் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்ட சம்மாந்துறை பிரதேச செயலாளர் எம்.எம் நஸீர், சம்மாந்துறை பிரதம நம்பிக்கையாளர் ஏ.சீ.ஏ.எம். புகாரி, தெ.கி.ப.கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் மன்சூர் ஏ. காதர், பிரதேச மு.கா. அமைப்பாளர், எம்.ஐ.எம். மன்சூர், தெ.கி.ப.கலைக்கழக மொழியியல் துறை தலைவர் றமீஸ் அப்துல்லாஹ், தெ.கி.ப.கலைக்கழக சமூக விஞ்ஞானத்துறை தலைவர் கலாநிதி எஸ்.எம். இஸ்மாயீல் ஆகியோர் சிறப்பு சொற்பொழிவாற்றினார்கள். குமுறல் பத்திரிகையின் முதற் பிரதியை ஆசிரிய குழு தலைவர் எம்.எல்.எம். முஜாஹித்திடமிருந்து கலாநிதி எஸ்.எம். இஸ்மாயீல் பெற்றுக்கொண்டார். நன்றியுரையை எம்.எம். சமீர நிகழ்த்தினார்.

**ஐ.எல்.ஜலீல்
சம்மாந்துறை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நேர்காணல்களா? தெருச் சண்டைகளா?

இலங்கைத் தொலைக்காட்சிகளிலும், வானொலிகளிலும் நேரடி அரசியல் வாத விவாத நிகழ்ச்சிகளில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதி அமைச்சர்கள், அமைச்சர்கள் பங்குபற்றும்போது, அவர்களுக்கிடையில் நடக்கும் குடுமிச் சண்டைகளைப் பார்க்கும் போது சகிக்க முடியவில்லையென எனது நண்பரொருவர் அண்மையில் என்னிடம் குறைபட்டுக் கொண்டார்!

இந்த மனக்குறை எனது நண்பருக்கு மட்டுமல்ல, நமது சமூகத்திலுள்ள பலருக்கும் நிறையவே உண்டென்பது எனக்குத் தெரியும்! என்ன செய்யலாம் இவர்கள் நம்மை இப்படித்தான் சீரழித்து விடுவதென கங்கணம் கட்டிச் செயற்படுகின்றபோது நாம் செய்வதற்கு என்னதான் இருக்கிறது?

முஸ்லிம் சமூகத்திற்குள் மேடைகளிலும், ஊர்களிலும் நடைபெற்று வரும் இவர்களுக்கிடையிலான பதவிப் போராட்டங்களில், ஒருவரை ஒருவர் தாறுமாறாக திட்டுவதும், கொச்சைப்படுத்துவதும் தொடர்கிறது.



இத்தகைய விசயங்களை ஊக்குவிப்பது போல் மக்களில் பலரும், இவர்களுக்கு பின்னால் நின்று, மற்றவர்களை தூற்றுவதும், துதிப்பதுமாக இருக்கின்ற போக்கை முஸ்லிம் கிராமங்களில் இப்போது காணலாம்!

நான் அவரின் ஆள், நீ இவரின் ஆள், அவர் செய்ததுதான் சரி, இவர் செய்வது தான் சரி என நமது மக்கள் இத்தகைய தனிநபர்களின் பின்னால் பிளவுண்டு நிற்கின்றனர். தலைவர்கள் ஓரடி பாய்ந்தால், தொண்டர்கள் பத்தடி பாய்கின்றனர். இவர்களுக்கிடையிலான பதவிச் சண்டையில், முஸ்லிம்களின் நியாயமான அரசியல் உரிமைகள் பலவீனப்பட்டு, பின்னடைந்து சென்று கொண்டிருக்கிறது.

முஸ்லிம் கிராமங்களுக்குள் நிலை கொண்டிருந்த இவர்களின் வாத விவாதங்கள், தொலைக்காட்சிகளிலும், வானொலிகளிலும் இவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் போது முழுஉலகுக்கும் அம்பலத்திற்கு வந்து விடுகிறது. காதையும் கண்ணையும் மூடிக்கொள்ளுமளவிற்கு கூச்சல்களும் நாற்றங்களும் பரப்பப்படுகின்றன.

உண்மையில், இவர்கள் இன்றைய முஸ்லிம் சமூகத்தின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைமைகளை, முஸ்லிம்கள் எதிர்கொள்கின்ற சவால்களை, அடக்குமுறைகளைப் பற்றி இத்தகைய சந்தர்ப்பங்களில் விரிவாகவும் ஆழமாகவும் பேசினால், எவ்வளவோ பயனுள்ளதாக இருக்கும்! பிற சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் நமது மக்களின் துயரங்களை புரிய வைக்க முடியுமல்லவா? ஏன் இவர்கள் தமக்கிடையிலான அதிகாரச் சண்டைகளை இந்த இடத்தில் அரங்கேற்றுகின்றனர்?

தனியார், அரச தொலைக்காட்சிகளும், வானொலிகளும் முஸ்லிம் சமூகத்திற்குள் இருக்கும் வெடிப்புகளையும் முரண்பாடுகளையும் அதிகம் கூர்மைப்படுத்தி விசாலமாக்கவே இவர்களை இந்த நேர்காணல்களுக்கு அழைத்து, கேள்வி மேல் கேள்வி கேட்டு, நிலைமையை மோசமாக்கும் கபடத்தனத்தைப் புரிகின்றது என்பதையாவது இவர்கள் இன்னும் உணரவில்லையா?

தொலைக்காட்சிகளிலும் வானொலிகளிலும் தோன்றிக் குரல் தரும் நமது முஸ்லிம் அரசியல் தலைமைகள் எப்போது நமது மக்களின் உண்மையான பிரச்சினைகள் பற்றி பேசுவர்? கொள்ளிவைக்கும் ராசாவிற்கு நெருப்பு வைக்கும் மந்திரிகள் போல் அறிவிப்பாளர்கள் செயற்படுகின்றனர். பல்வேறு சந்தர்ப்பங்களில் நிகழ்ச்சிகளில் தோன்றும் அரசியல்வாதிகளைப் போல், கேள்வி கேட்பவர்களும் தமது முட்டாள் தனத்தை வெளிப்படுத்த தவறுவதே இல்லை! நேர்காணல் என்ற பெயர்களில் அசிங்கமான கூத்துகள் அரங்கேறுகின்றன.

# வழமையான பேச்சுக்கு அப்பால் பொறுப்பான பங்களிப்பு இல்லையா?

கடந்த 11ஆம் திகதி புதன்கிழமை முஸ்லிம் தகவல் நிலையத்தால், தேசிய நூலகமண்டபத்தில் நடைபெற்ற கடற்கோள் அனர்த்தத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இழப்புகளை தொகுத்த ஆவண நூல் வெளியீட்டு விழாவுக்கு அதிதியாக வந்த ஜனாதிபதி சட்டத்தரணி சுஹைர், அங்கு பேசிய பேச்சில் முஸ்லிம்களின் இழப்புகள் தொடர்பாக அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் ஒரு தொனியையும் காணாதது பலத்த ஏமாற்றமாகவே இருந்தது. சிறப்பு அதிதியாக வந்த ஜனாதிபதியின் ஊடாகத் துறை பேச்சாளரும், ஜனாதிபதியின் நெருங்கிய சகாவான ஹரீம் பீரிசின் பேச்சிலும், பொதுக்கட்டமைப்பு விடயத்தில் முஸ்லிம்கள் சமத்துவத் தரப்பாக இணைக்கப்பட்டுள்ளனர் என்றே தெரிவித்தார். (எது சமத்துவத்தரப்பு)?



குறிப்பிட்ட இவ்விருவரையும் விசேடமாக அதிதியாக அழைத்ததற்கு யாதெனும் ஒருகாரணம் இருக்கலாம்! ஆனால் அவ்விருவரும் தெரிவித்த கருத்துக்கள் எந்த விதத்தில், நியாயமாக முஸ்லிம்கள் விடயத்தில் இவர்கள் பணியாற்றவுள்ளனர் என்கிற சந்தேகத்தை எழுப்பியது உண்மை! சுஹைர் அவர்களின் உரையில் ஜனாதிபதி பிரேமதாசாவும், சிறிசேன குரேயும் இணைந்து 17 வருடமாக வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் மூலம் 1 இலட்சம் வீடுகளைக் கூட கட்டவில்லை. சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீள் குடியிருப்புகளை கட்டி முடிப்பதற்கு 17 மாதங்களை ஏன் அரசாங்கத்திற்கு வழங்கக் கூடாது என்று கேட்டார்! ஜனாதிபதியின் சார்பாக அங்குவந்த சுஹைர், முஸ்லிம்கள் சார்பாக ஜனாதிபதியுடன் பேசுவாரா? ஏற்படுத்தப்படப் போகும் பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு நியாயம் வழங்க ஆவண செய்வாரா? ஜனாதிபதி முஸ்லிம்களை புலிகளிடம் அடகுவைத்தால் சுஹைர் என்ன செய்வார்? என்கிற கேள்விகள் எமக்கு முன் எழுந்தன!
ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் சார்பில் கலந்து கொண்ட இருவரும் வெறும் கனவான் பேச்சு பேசினரே தவிர, முஸ்லிம்களுக்கு உருப்படியான நம்பிக்கை தரும் வகையில் பேசாதது 'பழைய குருடி கதவைத் திறடி' கதையாகத்தான் இருந்தது. ஏற்பாட்டாளர்களாவது தமது சமூகப் பணியின் நோக்கம் கருதி அங்கு பல்வேறு விடயங்களை அழுத்திப் பேசி இருக்கலாம் என்பதே எமது கருத்து!
சுஹைரிடமும் ஹரீம் பீரிசிடமும், பொதுக்கட்டமைப்பு விடயத்தில் முஸ்லிம்களை அரசாங்கம் எந்த விடயத்தில் தனித்தரப்பாக இணைத்திருக்கிறது என யாரும் கேட்காமல் விட்டதால் இருவரும் தப்பித்து விட்டனர். வழமையான பேச்சுக்கள், ஆள்மாறி ஆள், இருக்குமிடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே!


## பாடசாலை நூல் நிலையங்களுக்கும் வாசிப்பதில் ஆர்வமுள்ளவர்களுக்கும்

**நூல்களின் குறிக்கப்பட்ட விலையிலிருந்து 30% கழிவு வழங்கப்படும்**

வெளியீட்டகம்



- பலஸ்தீனக் கவிதைகள் (மொழிபெயர்ப்புக் கவிதைகள்) பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் **210/=**
- ஈழத்து இலக்கியத்தடம் (கட்டுரைகள்) பேராசிரியர் கா. சிவத்தம்பி **210/=**
- மறைத்தலின் அழகு (சிறுகதைத் தொகுதி) எஸ். நசிருத்தீன் **140/=**
- சமகால இலக்கிய ஆளுமைகள் (நேர்காணல்கள்) எம். பௌஸர் **220/=**
- பிரபஞ்சம் முதல் பூமி வரை ஏ.எல். ஷிஹாறா (விஞ்ஞானத்துறை மாணவாகளுக்கானது) **160/=**
- இலங்கை இனக்குழும அரசியல் (அரசியல் மாணவர்களுக்கானது) அ. யோதிலிங்கம் **100/=**
- ஆளற்ற தனித்த தீவில் நிலவு, ஈரமற்ற மழை (கவிதைத் தொகுதி) செழியன் **80/=**
- இன்றும் கேட்கும் குரல் (விபுலானந்தர் பற்றியது) செ. யோகநாதன் **200/=**
- காவு கொள்ளப்பட்ட வாழ்வு (கவிதைத் தொகுதி) ஏ.எம். ரஷ்மி **150/=**
- யுகமொன்று உடைகிறது (சிறுகதைத் தொகுதி) தங்கராசா **120/=**
- எல்லை கடத்தல் (கவிதைத் தொகுதி) ஔவை **100/=**
- அரசியலில் பெண்களும், பெண்களின் அரசியலும் (அரசியல் ம்ாணவர்களுக்கானது) எஸ். சரவணன் **230/=**
- ஊஞ்சல் ஆடுவோம் (சிறுவர் கவிதைகள்) மு. பொன்னம்பலம் **100/=**
- தூவானம் (பத்தி எழுத்துக்கள்) அ. யேசுராசா **120/=**
- திருக்குறள் ஒழிபியல் (தமிழ்மொழி மாணவர்களுக்கானது) ஏ.எஸ்.எம். பௌஸி **70/=**

**வாசிப்பு மனிதனை பூரணமாக்கும்!**

**Advt.**

குறிப்பிட்ட நூல், நூல்கள் தேவைப்படுவோர் அதுபற்றிய விபரங்களை எமக்கு எழுதவும். நூல்கள் தபாலில் அனுப்பிவைக்கப்படும் - V.P.P வசதியும் உண்டு! காசுக் கட்டளையாக இருந்தால் **M.L.M. Rameed** எனக்குறிப்பிடவும். காசுக்கட்டளை மாற்றும் தபால் நிலையமாக வெல்லம்பிட்டியைக் குறிப்பிடவும்!

தொடர்புகளுக்கு:-
119/15, Vivian Gunawardene Mawatta,
(Kittampahuwa Road) Wellampitiya.
Phone: 077 3131627, Fax: 0114 618979


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்குப் பல்கலைக்கழகம் பாரிய பங்களிப்பை ஆற்றியிருக்க முடியும்!




- மிஸ்மா -

ஒரு சமூகமானது பிரச்சினைகளை எதிர்கொள்ளும் போதுதான் அதன் ஒற்றுமையும், பலமும் தேவைப்பாடானதாக உணரப்படுகின்றது. இனப்பிரச்சினைத் தீர்விலும் சுனாமி அனர்த்தத்தின் பின்னரும் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினைகளான பொதுக்கட்டமைப்பு, மீள்குடியேற்றம், நிலப்பற்றாக்குறை, தொழில் வாய்ப்பின்மை, கலாசாரச் சீரழிவுகள், குன்றிய கல்விச் செயற்பாடுகள், பெரும்பான்மைச் சமூகத்தின் ஊடுருவல்கள் இதனோடிணைந்த இன்னோரன்னப் பிரச்சினைகளுக்கு முஸ்லிம்கள் இன்று முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். இந்தப் பிரச்சினைகளுக்கு சரியான மார்க்கத்தில் தீர்வைக் காணும்போதுதான் முஸ்லிம்களின் சுயமும், கலாசாரப் பண்பும், இருப்பும் நிலை நிறுத்தப்படும்.

முஸ்லிம்கள் ஒன்றுபட்டு, ஒரு அரசியல் பலமாக இன்று இருந்திருந்தால் அரசாங்கத்துடனோ அல்லது ஏனைய சக்திகளுடனோ பேரம்பேசி சமூகத்திற்கு தேவையான அரசியல் ஒப்பந்தங்களைச் செய்யவும், ஒழுங்கான கட்டமைப்பினைச் செயற்படுத்தவும் முடிந்திருக்கும். தற்போது முஸ்லிம்கள் சிதறுண்டு கதிரைக்கும், கனவுகளுக்கும் கட்டுண்டு கிடக்கின்ற நிலையில் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தீர்க்கப்பட ஏதுக்கள் ஏதும் உள்ளனவா? ஒட்டுமொத்தமாக முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் சிந்தனை மாற்றம் ஏற்படா நிலையில் இவைகள் சாத்தியமா? சமூகப் பிரக்ஞையோடு இந்த அரசியல்வாதிகள் சிந்தித்து செயற்படுவார்களா? என்ற கேள்விகள் மக்களிடத்தில் பலமாகத் தோன்றியுள்ளது.

ஒரு சமூகத்தின் அறிவு, ஆளுமை விருத்தி, கலாசாரம், பண்பாடு, அரசியல் விருத்தி, விடுதலைப் போராட்டம் போன்றவற்றில் பல்கலைக்கழகங்களின் பங்கு மகத்தானவை. இக்கட்டான வேளைகளில் சமூகங்களை வழிநடத்திச் செல்கின்ற தார்மீகப் பொறுப்பினை பல்கலைக்கழக மாணவர்கள் கொண்டிருக்கின்றனர் என்பதை யாரும் மறுக்க முடியாது. மறைந்த தலைவர் அஷ்ரஃப் அவர்களின் கனவுகளில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உருவாக்கமும், அதன் செயற்பாட்டு விருத்தியும் சமூகத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தும் என்று நினைத்தார். சமூகத்தில் ஏற்படுகின்ற எல்லா இடைவெளிகளையும் பல்கலைக்கழகச் சமூகம் ஈடு செய்யும் என மறைந்த தலைவர் கனவு கண்டார். யதார்த்தத்தில் உணர்ந்து அவர் கொண்டதை தன் சமூகத்தின் செயற்பாட்டினூடாகக் காணவிழைந்தார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகச் சமூகம் முஸ்லிம் தேசப்பிரகடனமொன்றைச் செய்தபோது பொதுமக்களும் சிறப்பான ஆதரவினை வழங்கி அதனை ஆசீர்வாதித்ததோடு மட்டுமல்லாது, தமது சமூகத்தின் இடர்பாடுகள், ஏற்றங்கள் போன்றவற்றில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் உன்னதமாக இருக்கும் என மலைபோல் நம்பினர். மானசீகமாகப் போற்றினர். முகவரியுடனான அறிவு சார்ந்த மையம் ஒன்று தமக்கு அரணாக இருப்பதாக உணர்வு கொண்டனர். கடந்த டிசம்பர் 26 சுனாமி கடற்பேரலை அனர்த்த நிகழ்வுக்குப் பிற்பாடு உலகத்தின் பல்கலைக்கழகங்கள், கல்விக்கூடங்கள் தங்களால் இயன்ற உதவிகளையும், சேவைகளையும் செய்ததோடு ஏனையவர்களிடமிருந்து தேவையான உதவிகளையும் பெற்றுக்கொடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியது. இலங்கையில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களும் தங்கள் தங்கள் முகவரிகளை நிரூபணப்படுத்தும் வகையில் பல சேவைகளையும், உதவிகளையும் செய்ததோடு மட்டுமல்லாது; உதவி மையங்களை நெறிப்படுத்தி உவப்பான சேவைகளையும் செய்துவருகின்றன.

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்படவில்லை. ஆனால், அப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற மாணவர்கள், கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் பாதிக்கப்பட்டதோடு, அவர்களின் குடும்பத்தினர்கள், உறவினர்கள், அயலவர்கள் எனப் பல்வேறுபட்டவர்களும் பாதிக்கப்பட்டதோடு கிழக்குப் பிராந்திய கரையோரப் பிரதேசங்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட முழு அங்கத்தினர்களையும் உள்ளடக்கியதான ஒரு சமூகமாகத்தான் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் விளங்குகின்றது. எனவே இப்பாரிய அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலத்தில் பங்கு கொள்ள தென்கிழக்குப் பல்கலைக்கழகச் சமூகம் முன்வராதது ஏன்? இழிநிலைக்குள்ளாக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க தயங்கி நின்றது ஏன்? இச்சமூகத்தின் தலைமைத்துவம் காப்போரின் பின்னடைவான எண்ணங்கள் காரணமா? அல்லது மக்களின் துன்ப துயரங்களில் கற்ற சமூகங்கள் ஈடுபடக்கூடாது என்ற மாயை காரணமா? தென்கிழக்கு பல்கலைக்கழக சமூகத்திற்கு இந்தச் சுனாமி பாரிய சந்தர்ப்பங்களை வழங்கியிருந்தும் அதனைப் பயன்படுத்தத் தவறிவிட்டது என்றே சொல்லவேண்டும். கஷ்டப்பட்ட இப்பிரதேச மக்களுக்கு இன, மத, பிரதேச வேறுபாடு பாராது தமது தொண்டுப்பணிகளை, உதவிகளைச் செய்வதன் மூலமும் ஏனைய தொண்டு நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகளை, உதவிகளை நெறிப்படுத்தி செயற்படுத்தியிருந்தால் இப்பிரதேசத்தில் இன்னல்பட்டவர்களின் துயரத்தில் பங்கு கொண்டிருக்க முடிந்திருக்கும். கஷ்டப்பட்ட மக்களை சாந்தப்படுத்தியிருக்க முடியும். இச்செயற்பாடுகளின் மூலமாக இப்பிரதேசத்தில் இன உறவுகளை மேம்படுத்தியிருக்க முடியும். பல்கலைக்கழகத்தின் அமைப்புக்கான நோக்கம் வெற்றி கொள்ளப்பட்டிருக்கும். தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முகவரி காலங்காலமாய் கௌரவப்படுத்தப்பட்டிருக்கும். பின்வரும் சந்ததியும் ஏனையோருக்கு உதவும் மனப்பாங்குகளை வளர்த்துக்கொள்ள ஏதுக்கள் ஏற்பட்டிருக்கும். இனிமேலாவது தென்கிழக்குப் பல்கலைக்கழகச் சமூகம் தம்மீது மறைமுகமாகக் கொண்டிருக்கும் கடமைகளை செயற்படுத்த துணிந்து முன்வரவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு

# மழை நீரினை சேமித்து வரட்சியினை வெல்வோம்!



நீர் என்பது வாழ்வின் ஊற்றாகும். இப்பாரினில் வசிக்கும் உயிரினங்களிடத்தில் அதிகளவில் இருப்பது நீரே. நீரின்றி உயிரினங்களால் வாழ முடியாது. எமது உணவு உற்பத்திக்காக விளைவிக்கப்படுகின்ற பயிர்களுக்கும், அன்றாட காரியங்களுக்கும் பாரியளவிலான தண்ணீரின் தேவையுள்ளது. தண்ணீர் என்பது வரையறுக்கப்பட்ட வளமாகும். இந்நாட்களில் எம்மால் கேட்கவும், காணவும் உள்ள செய்திகளின் வாயிலாக அது நன்கு புரிகின்றது.

வரட்சியினால் பாதிக்கப்பட்டோர் பற்றியும், அவர்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணங்களைப் பற்றியுமே வரட்சி காலங்களில் அடிக்கடி செவிமடுக்கக் கூடியதாக உள்ளது. இதற்கு போதியளவு மழை நீர் கிடைக்காததோ எனும் கேள்வியே இந்த இடத்தில் எழுகிறது.

நீரோடைகள், சிறு அருவிகள், ஆறுகள், வாவிகள், குளங்கள் ஆகியவற்றில் தேங்கியுள்ள மற்றும் நிலத்தடி நீர் ஊற்றுக்களிலிருந்தோ நாம் தண்ணீரினைப் பெற்றுக்கொள்கிறோம். மழை காரணமாகவே இவற்றுக்கு தண்ணீர் கிடைக்கிறது. மழை நீரில் ஒரு பகுதி நேரடியாகவே வாவிகள், குளங்கள் ஆகியவற்றில் தேங்குவதுடன், வேறொரு பகுதி நீர் நிலத்திற்குச் செல்கிறது.

எந்த நாளும் மழை வீழ்ச்சி கிடைக்காதபடியினால் மழைக்காலத்தில் கிடைக்கும் நீரினை அதிகபட்சமாக வாவிகளிலும், குளங்களிலும், வேறு நீர்த்தேக்கங்கள் மற்றும் தண்ணீர் தாங்கிகளில் சேமித்துவைக்க வேண்டும். அப்படி அல்லாவிடில் அவற்றினை நிலத்தடி நீர் ஊற்றுக்களில் தேக்கிவைக்க வேண்டும். நிலத்தடியில் தேங்கியுள்ள நீரின் காரணமாகவே நிலத்தின் மேற்புறத்தில் பாய்ந்தோடும் சிறு நீரோடைகளும், பாரிய நதிகளும் போசிக்கப்படுகின்றன.

இவற்றுள் பாரிய நீர்த்தொகுதியானது உரிய பயனைப் பெறாமல் கடலில் சேருகிறது. இது ஒரு வகை நீர் விரயமாகும். நாம் காலையில் எழுந்தது முதல் மீண்டும் நித்திரைக்குச் செல்லும் வரை உரிய முறையில் தண்ணீரைப் பாதுகாப்பதில்லை என்பதும் வெள்ளிடமலை. எந்நேரமும், நீர் குழாயானது திறந்தே இருப்பதனால் தேவையான நீரினது அளவினைக் காட்டிலும் இரண்டு மடங்கு நீர் விரயமாகிறது எனச் சொல்லப்படுகிறது.

இவ்வாறு விரயமாகும் தண்ணீரினது பெறுமதியினை ஓரளவேனும் கணக்கிட வேண்டுமானால் இன்று சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள தண்ணீர் போத்தலின் விலையுடன் ஒப்பிட்டுப்பார்க்கலாம். 01 லீட்டர் அடங்கிய ப்ளாஸ்டிக் தண்ணீர் போத்தலொன்றின் விலை 25 ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்டதாகும். அப்படியாயின் நாம் வீண்விரயமாக்கும் தண்ணீரின் அளவு எவ்வளவு பெறுமதியானதாக இருக்கும்? இவ்வாறு விரயமாகும் நீரினை வேறு காரியங்களுக்கு பயன்படுத்துவோமேயானால் நஷ்டத்தினை குறைத்துக்கொள்ள முடியும். இவ்வாறான நீர் மீள்பாவனை முறையானது பல நாடுகளில் பின்பற்றப்படுகின்றது. குறைந்த பட்சம் வீட்டில் பயன்படுத்தப்பட்ட நீரை மரம், செடி, கொடிகளுக்கும், பூச்செடிகளுக்கும் பயன்படுத்துவோமேயானால் அது மிகவும் பெறுதியான செயலாகும்.

இவ்விடயங்களை கருத்தில் கொள்ளும்போது வேறொரு விடயம் தெளிவாகிறது. வரட்சிக்குக் காரணம் காலநிலை மாறுபாடு மட்டுமல்ல. எமது செயற்பாடுகளின் பெறுபேறாகவும் அது இருக்கக்கூடும். ஆகவே, எப்போதும் இயற்கை மீது குறை கூறுவதானது பயனற்ற ஒன்றாகும்.

சிறிய நாடான எமது நாட்டுக்கு கிடைக்கும் மழை வீழ்ச்சியினைப் பற்றி சிந்தித்துப் பார்க்கும் போது, எமக்கு வெப்ப வலயம் ஒன்றே இருக்க முடியாது. நாட்டின் மத்தியில் அமைந்துள்ள உயர்ந்த மலைநாடானது அதனைச் சுற்றி அமைந்துள்ள சமவெளிகளுக்கும் தேவையான நீரினை வழங்கி போசிக்கத்தக்க பிரதேசமென அடையாளம் காணக்கூடியதாகவுள்ளது. அங்கிருந்து அருவிகள், ஆறுகள், நீரோடைகள் நாட்டினைச் சுற்றிலுமுள்ள தாழ்ந்த பிரதேசங்கள் ஊடாக பாய்ந்தோடுகின்றன. வரண்ட பிரதேசங்களில் நீரினை தேக்கி வைப்பதற்காக பாரிய வாவிகளும், நீர்த்தேக்கங்களும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இப்படியிருந்தும் சில மாதங்கள் மழைவீழ்ச்சி ஏற்படாவிடில் எவ்வாறு வரட்சி நிலை தோன்றும்?

'மரத்திலிருந்து விழுந்தவனை மாடுமிதித்தது போன்று' காலநிலை மாற்றம் (பூமியில் வெப்பம் அதிகரித்தல்) காரணமாக எதிர்காலத்தில் மழை கிடைக்கும் போது குறுகிய காலத்தில் அதிக மழை வீழ்ச்சியும், மழை குறைந்த கால எல்லையானது நீண்டதாக இருக்குமென்றும் சூழல் விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அவ்வாறான நிலையொன்று எதிர்காலத்தில் தோன்றுமானால் நகரமயம் மற்றும் சனத்தொகைப்பெருக்கம் ஆகியன காரணமாக வெகுவிரைவில் கடல் நீரைத்தான் நாம் பயன்படுத்த வேண்டி வருமே தவிர; மாற்று வழி எதுவுமில்லை. எம்மைப் போன்ற ஒரு வறிய நாட்டுக்கு நடைமுறையில் அது எவ்வளவு கடினமானது என்பது புலனாகும்.

ஆகவே, மழை காலத்தில் ஒவ்வொரு துளி நீரினையும் தேக்கிவைத்து அதனை அதிகபட்ச சிக்கனத்துடன் பயன்படுத்துவதற்கு நாமனைவரும் மனதில் கொள்ளவேண்டும். தண்ணீர் என்பது அனைவருக்கும் பொதுவானதோர் வளம் என்பதனை மறந்துவிடலாகாது.

வரட்சிக்கு மழை வீழ்ச்சியின் போதே சிகிட்சை அளிக்க வேண்டுமே தவிர, வரட்சியின் போதல்ல! நாம் உரிய முறையில் கட்டுப்பாடுடன் நீரினை பாவிக்க முற்படாத பட்சத்தில், மிக விரைவில் நீரானது எம்மை கட்டுப்படுத்த முற்படும் என்பதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக சுயநிர்ணய உரிமையும் முஸ்லிம் மக்களும்




விஸ்வலிங்கம் சிவலிங்கம்

இஸ்லாமிய மக்களின் பிரச்சினை எந்த அடிப்படையில் தீர்க்கப்படவேண்டும் என்பது குறித்த விவாதங்களை விட யாரால் தீர்க்கப்படவேண்டும் என்பதிலேயே அதிக நாட்டம் செலுத்தப்படுகிறது. இதன் காரணமாக ஒரு சாரார் விடுதலைப்புலிகளை நோக்கியும், இன்னொரு சாரார் அரசாங்கத்தை நோக்கியும், மறுசாரார் எதிர்கட்சிக்களை நோக்கியும் பயணத்தை தொடர்கின்றனர்.

முஸ்லிம் மக்களின் எதிர்காலம் எவ்வாறு அமைய வேண்டும்? என்பதே எம் முன்னுள்ள கேள்வியாகும். இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்களின் பிரச்சினை கிழக்கு மாகாணத்தின் தென்கிழக்குப் பகுதியில் ஓர் தனிஅலகை உருவாக்குவதன் மூலம் நிறைவேறுமா? அல்லது இலங்கை முழுவதிலும் வாழும் முஸ்லிம் மக்களின் சமூக பொருளாதார அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான மாதிரியை வடிவமைப்பதா? இன்று தமிழ் அரசியல் தலைமைகள் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களின் நலனுக்காகப் பேசி ஏனைய ஏழு மாகாணங்களில் வாழும் தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தை சிங்கள பேரினவாத சக்திகளால் இரண்டாம்தர பிரஜைகளாக நடத்தும் ஆபத்தை ஏற்படுத்தி வருகின்றனர். அதேபோன்ற நிலமையே தனி அலகுக் கோரிக்கையினால் ஏற்படக்கூடும். நாடு முழுவதற்குமான அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்காமல் பிராந்திய உரிமைகள் பற்றிப் பேசுவது ஏனைய மக்களை நட்டாற்றில் விடுவதற்கு ஒப்பாகும்.

இனி நாம் ஓர் முக்கியமான அம்சத்திற்கு வருவோம். இலங்கையில் வாழும் தேசிய இனங்களின் பிரச்சினையை நாம் எந்த அடிப்படையில் தீர்த்துக்கொள்ள விரும்புகிறோம் என்பதாகும். உதாரணமாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமானால் அரசியல் அமைப்பு மாற்றங்களினுடாகவே பாதுகாக்கப்பட முடியும். அவ்வாறானால் அரசியல் அமைப்பு வடிவத்திலேயே இதற்கான தீர்வுகளை முன்வைக்க வேண்டும். ஆனால் இதற்கான முன்னெடுப்புகள் காணப்படவில்லை. பதிலாக தத்தமக்குரிய ஸ்தானங்களை வலுப்படுத்தும் முயற்சிகளாகவே காணப்படுகின்றன.

முஸ்லிம் மக்களின் அரசியல் அடிப்படை உரிமைகள் அரசியல் அமைப்பில் உறுதி செய்யப்படவேண்டும் என்பதனையும், அரசியல் அமைப்பு மாற்றம் ஒன்றினூடாகவே தமது உரிமைகளைப் பாதுகாக்க விரும்புவதாகவும் தெளிவாக வலியுறுத்த வேண்டும். இவ்வாறான மிகத் தெளிவான விதத்தில் தமது அரசியல் கோரிக்கையை முஸ்லிம் அரசியல் தலைமைகள் முன்வைக்குமாயின் ஐக்கிய இலங்கைக்குள் சகோதரத்துவத்துடன் வாழத் துடிக்கும் பல்லாயிரக்கணக்கான தமிழ், சிங்கள சக்திகள் இதனை ஆதரிக்க முன்வருவர்.

தனி நபர்கள் தமது அரசியல் பலத்தினை ஒருமுகப்படுத்தும் யுக்திகளே தற்போது காணப்படுகின்றன. ஒரு புறத்தில் தமிழ் ஈழத்தினையும், மறு புறத்தில் உள்ளக சுயநிர்ணய உரிமையினையும் வலியுறுத்தி தமிழ் அரசியலை ஓர் குழப்ப நிலையில் வைத்திருக்கும் தமிழ் அரசியல் தலைமைகளின் தயவுக்காக காத்திருக்கும் போக்கு அரசியலில் தமக்கென ஒரு இடத்தைப் பிடிக்க எடுக்கும் போட்டியாகவே உள்ளது.

இவ்வாறு தமது பதவிகளைப் பாதுகாக்க நடத்தும் போட்டிகளால் முஸ்லிம் மக்களின் நியாயமான கோரிக்கைகளைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழர்களின் போராட்டத்தைக் காட்டிக் கொடுப்பதாகவும், சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் பலவீனப்படுத்துவதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது. நாம் இதனைத் தட்டிக்கழிக்க முடியாது. இடைக்கால நிர்வாகம் என்றால் தனி அலகு, உள்ளக சுயநிர்ணய உரிமை என்றால் எமக்கு உண்டு எனப் பேசுவதெல்லாம் முஸ்லிம் மக்களின் அரசியல் கோரிக்கையைப் பலவீனப்படுத்துவதாகும்.

தேசிய இனங்களின் இறைமை அதிகாரம் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் இந்த நிர்ணயகரமான காலகட்டத்தில் பேரம் பேச முடியாது. ஜனநாயகத்திற்காகவும், அபிவிருத்திக்காகவும், மனித உரிமைக்காகவும் செயற்படுவதாகக் கூறுபவர்களை முஸ்லிம் மக்கள் பரிசோதிக்க வேண்டிய நிலையில் அதாவது அவர்களது உள்நோக்கங்களை அம்பலப்படுத்தும் காலகட்டத்தில் உள்ளனர். இவ்வாறான ஓர் அணுகுமுறை ஒன்றின் மூலமே முஸ்லிம் மக்களின் பொருளாதாரத்தையும் தனித்துவத்தையும், பேணுவதோடு நாட்டின் சகல துறைகளிலும் இன இணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்றுவரும் ஆயுதப்போராட்டம் சிங்கள பேரினவாதத்திற்கு எதிரான செம்மையான பதிலடியைக் கொடுத்துள்ள போதிலும்; அது தமிழ் மக்களின் விடுதலையை நோக்கியது எனக் கூறப்படினும் அவ்வாறான விடுதலையை நோக்கிச் செல்லவில்லை என்பது இனங்கள் மத்தியில் காணப்படும் பகை உணவை பறைசாற்றுகிறது. ஓர் விடுதலைப் போராட்டம் என்பது போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே தேசிய உருவாக்கத்தையும் எடுத்துச் செல்ல வேண்டும். விடுதலைப் போராட்டம் என்பது ஓர் தேசிய உருவாக்கத்திற்கான (Nationhood) போராட்டமாகும். அதாவது சிங்கள பேரினவாத, பௌத்தமத மேலாதிக்கத்திற்கு எதிரான தமிழ்த் தேசியத்தை உருவாக்குவதாகும். தமிழ்த் தேசியம் என்பது தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் இணைந்த தேசியமாகும். இத் தமிழ் தேசிய உருவாக்கமானது இலங்கையில் நீதியான, சமத்துவமான ஆட்சியை உருவாக்கும் அடிப்படையைக் கொண்டதாகும். இவ்வாறான இலட்சியப் போக்குகளைக் கொண்ட ஓர் அமைப்பினால் மட்டுமே விடுதலையைப் பெற்றுக்கொள்ளமுடியும். தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகள் சர்வதேச அடிப்படையில் நோக்கும் போது வேறெங்கிலும் இல்லாத தனித்துவமான பிரச்சினையாக இல்லை. பல்வேறு நாடுகளில் பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனம், இனங்களை ஒடுக்கி ஆட்சி நடத்துவதை நாம் தினமும் அறிகிறோம். இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு தனித்துவமான ரீதியில் அணுக முடியாது. சர்வதேச அரசுகள் ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சில வரையறைகளின் அடிப்படையில்தான் இதற்கான தீர்வினைச் சிபார்சு செய்ய முடியும்.



**விடுதலைப் போராட்டம் என்பது போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே தேசிய உருவாக்கத்தையும் எடுத்துச் செல்ல வேண்டும். விடுதலைப் போராட்டம் என்பது ஓர் தேசிய உருவாக்கத்திற்கான போராட்டமாகும்!**

அத்துடன் இப்பிரச்சினைக்கான தீர்வின் அணுகுமுறைகள் எமது அண்டைய நாடான இந்தியாவில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. அதுமட்டுமல்லாமல் இந்திய துணைக்கண்டத்தில் இந்திய அரசின் செல்வாக்கு பாரதூரமான செல்வாக்கைச் செலுத்தி வருகிறது.

அத்துடன் இந்தியாவின் அரசியல், பொருளாதார, கலாச்சார தாக்கங்கள் இலங்கையிலும் பிரதிபலிக்கின்றன. எனவே இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் கொள்கை பிரதான அம்சமாகும். இந்தியாவைப் பொறுத்தவரையில் இலங்கை ஒரே தேசம் என்பதிலும், அதில்வாழும் தேசிய இனங்களுக்கு நியாயமான உரிமைகள் வழங்கப்படவேண்டுமெனவும் வற்புறுத்துகிறது. இந்திய அரசு இலங்கைப் பிரச்சினை குறித்து எடுத்துள்ள நிலைப்பாடுகள் இலங்கை அரசியல் அமைப்பினூடாக மாற்றங்களைக் கோருவதன் மூலம் இந்திய ஆதரவையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இதுவரையில் உள்ளக சுயநிர்ணய உரிமை, அதில் முஸ்லிம் மக்களின் பங்கு குறிப்பாக அரசியல் அமைப்பு ரீதியான மாற்றத்தினூடான தீர்வை வற்புறுத்தல் என்பவை பற்றிப் பார்த்தோம். எதிர்காலத்தில் எவ்வாறான தீர்வு சாத்தியமானது எனப் பார்ப்போம்.

(முடிவடைந்து விட்டது) ■

## கல்வி பற்றி அல்குர்ஆன்...!



'கற்றவர்களும்' 'கல்லாதவர்களும்' சமமாவார்களா? (அல் -குர்ஆன்: 39-9)

ஞானத்தில் நின்றும் உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது ஒரு சிறிதேயாகும் (அல்-குர்ஆன்: 17-85)

அடியார்களில் இறைவனைப் பயப்படக் கூடியவர்கள் கற்றவர்களே (அல் -குர்ஆன்: 35-28)

இறைவா! எனக்குக் கல்வியை அதிகமாக்குவாயாக என நபியே நீங்கள் (துஆக்) கேளுங்கள் (அல் -குர்ஆன்: 2-114)

உங்களின் தந்தையர்களும் நீங்களும் அறிந்திராத ஒன்றை நீங்கள் அறிவித்துக் கொடுக்கப்பட்டீர்கள் (அல் -குர்ஆன்: 6-91)

உலகில் உள்ள மரங்களனைத்தும் பேனாவாக, அலைகடல் அனைத்தும் மையாக

**மௌலவி எம்.ஆர்.எம். ஹலீமுல்லா - நாபாவெள அவிசாவெல**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்கோள் அனர்த்தத்தினால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இழப்புகளை செம்மையாக ஆவணப்படுத்தியுள்ள தொகுப்பு

வெளியீடு
முஸ்லிம் தவகல் நிலையம்
19/1/1 பீரிஸ் மாவத்தை,
களுபோவில,
கொழும்பு.


AN INTERIM REPORT ON LOSS ASSESSMENT OF TSUNAMI - AFFECTED MUSLIM AREAS IN SRI LANKA

MUSLIM INFORMATION CENTRE - SRI LANKA

முஸ்லிம் சமூக சக்திகளின் கூட்டு உழைப்பினால்; கடற்கோளின் போது இலங்கை முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்ட இழப்புகளை நாடளாவிய ரீதியில் ஒன்று திரட்டி; தகவல்களை உறுதிப்படுத்தி; விஞ்ஞான பூர்வமாக ஒருசெம்மையான ஆவணத்தை முஸ்லிம் தகவல் நிலையம் தொகுத்து வெளியிட்டுள்ளது. சமூக அக்கறையுள்ள சக்திகள் மனம் கொள்ளத்தக்க ஆவணம் இது. இம் முயற்சியில் பங்களித்த தனிநபர்கள், நிறுவனங்கள் தமது கடமையை இத்தளத்தில் செய்துள்ளன.

கடற்கோளினால் இழந்த உயிர்களில் 41 வீதமானோர் முஸ்லிம்கள் என்பதையும், காணாமல் போனவர்களில் 34 வீதமானோர் முஸ்லிம்கள் என்பதனையும், இடம் பெயர்ந்தோரில் 32 வீதமானோர் முஸ்லிம்கள் என்பதனையும், முற்றாக அழிவுக்குள்ளான குடியிருப்புகளில் 25 வீதமானவை முஸ்லிம்களுடையது என்பதும், பகுதியளவில் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளில் 33 சதவீதமானவை முஸ்லிம்களுக்குரியது என்பதுடன், காயமடைந்தவர்களின் மொத்தத் தொகையில் 49 வீதமானோர் முஸ்லிம்கள், என்பதனையும் இத்தொகுப்பு தக்க ஆதாரத்துடன் உறுதிப்படுத்தியுள்ளது. மேற்கூறப்பட்ட தரவுகளை மாவட்ட, பிரதேச செயலக ரீதியாகவும் இத்தொகுப்பு அடையாளப்படுத்தியுள்ளது.

கடற்கோளினால், கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மட்டுமல்ல; அம்பாந்தோட்டை மாவட்ட முஸ்லிம்களும் பெருமளவு உயிரிழப்பு, சொத்திழப்புகளைச் சந்தித்துள்ளனர் என்பதனை முஸ்லிம் தகவல் நிலையத்தின் ஆய்வு முடிவு வெளிப்படுத்தி உள்ளது. கடற்கோளினால் அம்பாரை மாவட்டத்திற்கு வெளியில் அடுத்து பெரும் இழப்பினைச் சந்தித்த மாவட்டமாக அம்பாந்தோட்டை உள்ளது.

இங்கு அம்பாந்தோட்டை மாவட்டத்தை விசேடமாகக் குறிப்பிடுவதற்கான காரணம்; அம்பாந்தோட்டை மாவட்ட முஸ்லிம்களுக்கு நேர்ந்த அவலத்தினை; நமது முஸ்லிம் சமூகமே இன்னும் அறிந்து கொள்ளவில்லை என்பதனால் தான். அம்பாந்தோட்டை மாவட்டத்தில்,

| | |
|---|---|
| மரணமடைந்த முஸ்லிம்களின் தொகை | - 3800 பேர் |
| காணாமல் போனோர் தொகை | - 444 பேர் |
| காயமடைந்தோர் தொகை | - 300 பேர் |
| இடம்பெயர்ந்த குடும்பங்கள் | -. 1171 |
| முற்றாக அழிந்த குடியிருப்புகள் | - 1091 |
| பகுதியளவில் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் | - 11 |

என இந்த ஆய்வு உண்மைகள் நமக்கு வெளிப்படுத்துகின்றன.

கடற்கோள் அனர்த்தத்தினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் வாழும் மாவட்டமாக அம்பாரை உள்ளது. அதற்கு அடுத்ததாக முறையே அம்பாந்தோட்டை, திருகோணமலை, மட்டக்களப்பு, காலி, மாத்தறை, களுத்துறை, கொழும்பு மாவட்டங்கள் உள்ளன. மொத்தமாக உயிரிழந்த முஸ்லிம்கள் 12562, காணாமல் போனோர் 1980, காயமடைந்தோர் 7285, இடம் பெயர்ந்துள்ள குடும்பங்கள் 41671, முற்றாக பாதிப்படைந்துள்ள குடியிருப்புகள் 21751, பகுதியளவில் பாதிப்படைந்துள்ள குடியிருப்புகள் 12207, பாதிக்கப்பட்டுள்ள பொது ஸ்தலங்கள் 308 என கண்டறியப்பட்டுள்ளது.

கடற்கோள் முஸ்லிம்களின் கல்வியில் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள், முஸ்லிம் பிரதேசங்களில் சுகாதார கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், முஸ்லிம் பிரதேசங்களில் கடற்கோள் அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட பள்ளிவாசல்கள், மத்ரசாக்கள், உடமையழிவுகளை, தனித்தனி விபரங்களாக இத்தொகுப்பு கொண்டுள்ளது.

முஸ்லிம்களின் இழப்புகளை திட்டமிட்டு மூடிமறைத்து வரும் சக்திகளுக்கு; நமது துயரங்களை ஆதாரத்துடன் நிரூபிப்பதற்கு தகுந்த ஆவணச் சாட்சியமாக நமது சமூக சக்திகளின் உழைப்பு அமைந்துள்ளது ஒருவகையில் பாதிக்கப்பட்ட நமக்கு ஆறுதலைத் தருகிறது. பாராட்டி மனக் கொள்ளத்தக்க முயற்சி, பல்வேறு விடயங்களை ஆவணப்படுத்த வேண்டிய அவசியத்தில் நாமுள்ளோம் - இத்தகைய பணிக்கு முன்னுதாரணம் இத்தொகுப்பு!

எஸ்.எல்.ஹம்தூன்

# தோப்பூருக்கு தனியான பிரதேச சபை கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள்?




திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தோப்பூர் என்ற பிரதேசத்துக்கான தனியான பிரதேச செயலகம் பெற்றுத் தருவேன் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் வாக்குறுதி அளித்து ஒருவருடம் கடந்தும் கூட எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்று தோப்பூர் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேச மக்கள் தங்களது அத்தியாவசியமான சமூர்த்தி முத்திரை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், உட்பட பலவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு பல மைல் தூரங்களுக்கு அப்பால் உள்ள மூதூர் பிரதேச செயலகத்துக்கு நாட்கணக்கில் அலைய வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகின்றது. இதனால் இப்பிரதேச மக்கள் வீண் செலவீனங்களையும், பல அசௌகரியங்களையும் எதிர்நோக்குகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சர்களும், அரசியல்வாதிகளும் தோப்பூருக்கான தனியான பிரதேச செயலகத்தை பெற்றுத் தருவேன் என்று பல வருடகாலமாக வாக்குறுதி அளித்துக்கொண்டு வருகின்றார்கள். ஆனால் வாக்குறுதியை நிறைவேற்றித் தருவதற்கு இவர்கள் தயங்குகின்றார்கள்.

இந்த நிலையில் தான் தேவைகளையும், அபிவிருத்திகளையும் கருத்திற்கொண்டு கடந்த 2004.03.04 ஆம் திகதி கல்விமான்களைக் கொண்ட குழு ஜனாதிபதி அவர்களை சந்தித்து இப்பிரதேசத்துக்கான தனியான பிரதேச செயலகத்தின் தேவை பற்றி ஆழமாக விளக்கிக் கூறியபோது இப்பிரதேச மக்களின் கோரிக்கைகள் நியாயமானது என்று ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி 2004ஆம் ஆண்டு நடைபெறுகின்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைத்தால் நிச்சயமாக தோப்பூருக்கான தனியான பிரதேச செயலகத்தை பெற்றுத்தருவேன் என்று பல ஊடகங்களுக்கு மத்தியில் வாக்குறுதி அளித்தார். ஆனால் ஆட்சி அமைத்தும் ஒரு வருடகாலம் நிறைவு பெற்றும் கூட தோப்பூருக்கான தனியான பிரதேச செயலகத்தை ஜனாதிபதி இன்னும் பெற்றுத்தரவில்லை என்று தோப்பூர் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஆர். சஜித் - தோப்பூர் செய்தியாளர்

# நிறைவு பெறாமல் ஏங்கிக் கிடக்கும் விடுதிக் கட்டடம்!


எம்.எப். முபாரக் - கந்தளாய் செய்தியாளர்

தி/அல் தாரிக் மகா வித்தியாலயத்திற்குரிய ஆசிரியர் விடுதிக் கட்டடத்தை பூர்த்தி செய்வதற்கு திருகோணமலை மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திடீர் தௌபீக் அவர்களினால் நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த விடுதி இன்னும் பூரணமாக நிறைவு பெறாமல் கைவிடப்பட்ட நிலையில் ஏங்கி காட்சியளிப்பதையே படத்தில் காணலாம்.

# மூதூர் வீதிகளின் அவலநிலை!

இன்று இலங்கையிற் பல பாகங்களிலும் சுனாமித்தாக்கம் ஏற்பட்டு நான்கு மாத கால எல்லையைக் கடந்து விட்டது. இக்கால எல்லையில் பல பிரதேசங்கள் மீளக் கட்டியெழுப்பப்படும் செயற்பாடுகள் நிகழ்ந்து கொண்டும் வருகின்றன. இந்த நிகழ்வுகளில் பெரும்பாலும் மூதூர்ப் பிரதேசம் வெறும் சூனியமாகவே சுனாமிப் பாதிப்பில் அகப்பட்டு அபிவிருத்தி வளர்ச்சிகள் குன்றியதாகவே காணப்படுகின்றன.

இங்கு சில அரசசார்பற்ற நிறுவனங்ளின் உதவிகள் மூலம் தற்காலிகக் கொட்டில்கள் சுனாமி அகதிகளுக்கு வழங்கப்பட்டிருந்தாலும், அவர்களின் சுயமான வாழ்க்கை சீர்பட்டதாகக் காணப்படவில்லை. இங்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட வீதிகள் பல சீரழிந்து காணப்படுகின்றன. பிரதானமாக மூதூர் ஜெற்றி வீதி, மின்சார நிலைய வீதி, நடுத்தீவு ரெலிகொம் வீதி போன்ற பல முக்கியமான வீதிகள் மக்கள் போக்குவரத்திற்கும், வாகனப் போக்குவரத்திற்கும் ஒவ்வாத நிலையில் பாதிப்புக்குள்ளாகிக் கிடக்கின்றன.

முக்கியமாக மூதூர் நடுத்தீவுக் கிராமத்தில் மூன்றுக்கு மேற்பட்ட தற்காலிக சுனாமி அகதிமுகாம்கள் நிறுவப்பட்டுள்ளன. இம்முகாம்களை மேற்பார்வை செய்யும் நிறுவனங்களின் கனரக வாகனங்கள் நடுத்தீவு ரெலிகொம் வீதியூடாக போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றன. இதனால் இவ்வீதி சுனாமியால் பாதிக்கப்பட்டதை விட வாகனப் பாதிப்பினால் மேலும் அதிக பாதிப்புக்குள்ளாகிவிட்டன. இவ்வீதிகளை செப்பனிடுதல் விடயமாக திருமலை மாவட்ட அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் நஜீப் ஏ மஜீத் அவர்களின் கவனத்திற்கு இப்பகுதி பொது அமைப்புகள் மூலம் மகஜர்கள் பல சமர்ப்பித்திருந்தும் இது பற்றி எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. நடுத்தீவு ரெலிகொம் வீதியானது 1985ஆம் ஆண்டளவில் திருத்தங்கள் மேற்கொண்டதிலிருந்து இன்று வரை சுமார் இருபது வருடங்கள் எவ்வித திருத்தங்களும் செய்யப்படாமலே இருக்கின்றன.

மூதூர் கலை மேகம்

# ஓய்வுபெற்றோரினது பசி!

அரசாங்கத் துறையில் பணியாற்றுபவர்களுக்கு மாதாந்த வேதனமானது அனேகமாக குறிப்பிட்ட ஓர் தினத்தில் வழங்கப்படும்.

தடுக்க முடியாத ஏதோ காரணத்தினால் அந்நாளானது முன்னோக்கி செல்லுமே தவிர ஒருபோதும் பின்னோக்கிச் செல்லாது என்பது அனுபவபூர்வமான உண்மையாகும். தப்பித்தவறி குறித்த தினத்தில் வேதனம் வழங்கப்படாவிடில் போராட்டம், ஆர்ப்பாட்டம், அச்சுறுத்தல் ஆகியவற்றுக்குப் பஞ்சமிருக்காது. அவற்றினையிட்டு அச்சப்படும் உயரதிகாரிகள் அவ்வாறு பணியாற்றுவோரினது வேதனத்தை குறித்த தினத்தில் வழங்கி விடுவதற்கு முனைப்பாயுள்ளார்கள் அத்தகைய அச்சம் காரணமாகவே அவர்களது வேதனம் திறைசேரியிலிருந்து கடனைப் பெற்றேனும் வழங்கப்படுகிறது.

ஆனால், ஓய்வூதியம் பெறுவோருக்கு யார்தான் பயப்படப் போகிறார்கள்? அவர்களால் போராட்டம் ஆகியவற்றினை மேற்கொள்ள முடியுமா?

ஆகவே, ஓய்வு பெற்றோரினது வேதனத்தை எப்போது வழங்கினாலும் பரவாயில்லை என்பதே உயரதிகாரிகளின் எண்ணமாகும்.

மேலும் சுட்டிக் காட்டுமிடத்து, ஜுன் மாதம் ஓய்வூதியம் 09ம் திகதியாகும். ஜுலை மாதம் 12ம் திகதியாகும். இதே போல் ஒக்டோபர் மாதம் 06ம் திகதியாகும். நவம்பர் மாதம் 10ம் திகதியாகும். இவ்வாறு ஓய்வூதியம் பெறுபவர்களை பசியால் வாடவிடுவதனால் உயரதிகாரிகளுக்கு என்ன லாபம்? அவர்கள் எதனை எதிர்பார்க்கின்றனர்? அது புரியாத புதிராகவே உள்ளது.

அரச சேவையில் பணியாற்றிவிட்டு ஓய்வுபெறுபவர்கள் உரிய முறையில் கௌரவப்படுத்தப்பட வேண்டும் என்பதே எல்லோரது எதிர்பார்ப்புமாகும்! இவர்களது ஓய்வூதியக் கொடுப்பனவுகள் குறிக்கப்பட்ட தினத்தில் வழங்கப்படுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டி.பி. ஜாயா, அசீஸ் போன்றோரது தூர நோக்கும், அர்ப்பணிப்பும் ஸாஹிறாக் கல்லூரியின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியுள்ளன!



சட்டத்தரணி ஏ.எம். ஜிப்ரி
செயலாளர் ஸாஹிறாக் கல்லூரி ஆளுனர் சபை

சந்திப்பு - நிசார் மௌலானா

*இலங்கை முஸ்லிம்களின் கல்வித்துறை வரலாற்றில் கொழும்பு சாஹிறாக் கல்லூரி பிரதான இடம் வகித்திருக்க வேண்டும். இப்போது ஸாஹிராவின் நிலை எப்படி உள்ளது என்பது பற்றி சொல்ல முடியுமா...?*

கொழும்பிலுள்ள பிரதான கல்லூரிகளுடன் ஒப்பிடுகின்றபோது சாஹிறாக் கல்லூரியின் நிலைப்பாடு குறிப்பிடத்தக்களவு இல்லாவிட்டாலும், கடந்த ஒரு வருட காலமாக இக்கல்லூரி குறிப்பிடத்தக்க வளர்ச்சிபெற்றுவருகிறது என்பதை இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். குறிப்பாக கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் 60% மானோர் க.பொ.த (உ/த) கல்வி கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். இது கடந்த வருடத்தினை விடவும் 40% அதிகரிப்பு எனக் குறிப்பிட முடியும். இதற்கு முக்கிய காரணமாக நான் கருதுவது கடந்த காலத்தில் கல்லூரியின் கல்வி வளர்ச்சியில் ஆளுனர் சபை திட்டமிட்ட எந்த அபிவிருத்தி செயற்பாடுகளையும் மேற்கொள்ளாமையே காரணம் எனச் சொல்லலாம். குறிப்பாக ஆசிரியர்களின் சம்பளம், மாணவர்களின் கல்வி வளர்ச்சி, மாணவர்களின் இன்னோரன்ன தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கான எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படவில்லை.

ஸாஹிறாவில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அரசாங்கத்திடமிருந்து சம்பளம் பெற்றுக் கொள்கின்ற ஆசிரியர்கள், கல்லூரி வளங்கள் மூலம் சம்பளம் பெற்றுக் கொள்கின்ற ஆசிரியர்கள் என இருவகைப்பட்ட ஆசிரியர்கள் உள்ளனர். இப்படியாக கல்லூரி வளங்கள் மூலம் சம்பளம் பெறுகின்ற ஆசிரியர்கள் சுமார் 20-30 வரைக்குமானோர் உள்ளனர். ஆனால் இவர்களின் சம்பளம் அரசாங்கத்திடமிருந்து சம்பளம் பெறுபவர்களை விடவும் மிகக்குறைவாகவே இருந்தது. ஆளுனர் சபைத் தலைவராக சட்டத்தரணி எம்.எம். சுஹைர் பதவியேற்றவுடன், ஸாஹிறாக் கல்லூரி கல்வித் துறையில் ஏன் பின்னடைந்து செல்கின்றது என்று ஒரு ஆய்வை மேற்கொண்டார். அதில் ஆசிரியர்களுக்கான உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படாமையால் ஆசிரியர்கள் வினைத்திறன் குறைந்தவர்களாக காணப்பட்டனர். முதலில் இக்குறைபாட்டை நீக்குவதற்கு நாம் முயற்சித்தோம். மற்றும் மாணவர்களுக்கான வகுப்பறைகள், போதுமான ஆசிரியர்கள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மிகக் குறைவாகவே காணப்பட்டன. ஆனால் தற்போது இந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளமையானது இக்கல்லூரியின் கல்வி வளர்ச்சி எதிர் காலங்களில் சிறந்து விளங்கும் என்ற நம்பிக்கையைத்தந்துள்ளது.

> **மேல் மாகாணத்தில் 59 முஸ்லிம் பாடசாலைகள் இருக்கின்றன. அவற்றில் 20 முஸ்லிம் பாடசாலைகள் கொழும்பு மாவட்டத்தில் மட்டும் இருக்கின்றன. இந்தப் பாடசாலைகளுக்கு எந்த முஸ்லிம் அரசியல் தலைமைகளோ, அமைச்சர்களோ போதியளவு பௌதீக வளங்களை பெற்றுக்கொடுக்கவில்லை என்பது தான் உண்மை!**

*இக்கல்லூரிக்கு ஒரு நீண்ட கல்விப் பாரம்பரியம் இருந்தது. ஆனால் தற்போது அந்தப் பாரம்பரிய பின்னடைந்து செல்வதாக உள்ளது. இதுபற்றி ஆளுனர் சபையின் செயலாளர் என்ற வகையில் என்ன கருதுகிறீர்கள்...?*

இக்கல்லூரி 1892ம் ஆண்டு உருவாக்கப்பட்ட போது இக்கல்லூரியில் அக்கறை கொண்டிருந்த முஸ்லிம் சமூகப் பெரியார்கள் உட்பட அப்போதைய காலத்தில் பதவி வகித்த அதிபர்கள் முழு அர்ப்பணிப்புடன் செயற்பட்டமையால் அந்த இலக்கினை அடைந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அவர்கள் எப்படியான எதிர்பார்ப்புகளை சந்தித்து இக்கல்லூரியை உருவாக்கினார்கள். அந்த எதிர்பார்ப்புகளை அடைவதற்கு ஸாஹிறாவை நடாத்தவேண்டிய கடப்பாடு அவர்களுக்கு இருந்தது. ஆக ஒட்டுமொத்தத்தில் இந்தக் கல்வி பாரம்பரியத்திற்கு பிரதான சக்தி அப்போதிருந்த அதிபர்கள் தான். குறிப்பாக டி.பி. ஜாயா அவரது அர்ப்பணிப்பு முயற்சியால் இக்கல்லூரியை படிப்படியாக தரமுயர்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. அதனை தொடர்ந்து A.R.A அசீஸ் இக்கல்லூரியின் அதிபராக 21 வருடங்கள் பணியாற்றினார். இவரது காலத்தில்



கல்லூரி மிகவும் வளர்ச்சியடைந்தது. குறிப்பாக டி.பி.ஜாயா, அசீஸ் போன்றோரது தூர நோக்கும், அர்ப்பணிப்பும் ஸாஹிறாக் கல்லூரியின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியுள்ளன.

இப்படியான அதிபர்களும், ஆளுனர் சபை உறுப்பினர்களும் பிற்காலத்தில் இக்கல்லூரிக்கு இல்லாமல் போனமை பெரும் துரதிஷ்டமே. அதன் பிறகு இக்கல்லூரியை அரசவுடமையாக்க எடுக்கப்பட்ட முயற்சிகள். அதனை எதிர்த்து ஸாஹிறாவை பாதுகாக்க வேண்டும் என்பதில் மக்கள் வீதிக்கு வந்து போராட்டம் செய்தார்கள். ஆனால் இக்கல்லூரியை அரசுடைமையாக்காமல் பாதுகாக்க வேண்டுமென்பதில் மக்களுக்கு இருந்த ஆர்வம், மற்றைய விடயங்களில் அவர்களுக்கு இருக்கவில்லை என்பது தான் மனவேதனையைத் தருகின்ற விடயம். அதனைத் தொடர்ந்து வந்த தலைமைகளிடத்தில் குறிப்பிடத்தக்க அளவு தூரதிருஷ்டி இருக்கவில்லை. இதற்குப் பல்வேறு காரணங்களும் இருந்துள்ளன. பௌதீக வளங்கள் பற்றாக்குறையாக இருந்தமை, குறிப்பாக சம்பளம் கொடுப்பதில் கூட பல பிரச்சினைகள் இருந்தது. கட்டிடங்கள் இன்மை, இப்படி பல குறைபாடுகளை வைத்துக்கொண்டுதான் தொடர்ந்து வந்த அதிபர்களும் ஆளுனர் சபையும் இக்கல்லூரியை வழி நடாத்துவதில் பெரும் சவால்களை' எதிர்கொண்டனர். பௌதீக வளங்களின் பற்றாக்குறை ஓரளவு நிவர்த்திக்கப்பட்டு வந்தாலும், அதனை நிர்வாகிக்கக் கூடிய ஆளுமைகள் போதியளவு காணப்படவில்லை. 1982 ஆம் ஆண்டிலிருந்து ஆளுனர் சபை இக்கல்லூரியை நிர்வகித்து வந்தாலும், அவர்களது செயற்பாடுகளும் குறிப்பிடத்தக்க அளவு இருக்கவில்லை என்று தான் கூறவேண்டும். இன்றும் இக்கல்லூரி நிர்வாகத்திற்கும் ஆளுனர் சபைக்குமிடையில் சில நேரங்களில் கருத்து முரண்பாடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களுமுண்டு மாணவர்களின் கல்வித் துறையை பாதித்த விடயங்களில் இதுவும் ஒன்று எனக் குறிப்பிட முடியும்.

*ஒவ்வொரு அரசாங்கத்திலும் பல முக்கிய முஸ்லிம் அமைச்சர்கள் இருந்தனர், இவர்களால் எந்த உதவியும் வழங்கப்படவில்லையா?*

சாஹிறாக் கல்லூரியின் வளர்ச்சியை அரசியல் அதிகாரத்தில் உள்ளவர்களைக் கொண்டு செய்ய முடியாது. ஏனென்றால் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் இருந்து நேரடியாக எந்த நிதியும் இக்கல்லூரிக்கு ஒதுக்கீடு செய்யப்படமுடியாது! சுமார் 75 வருடங்களுக்கு முன்னர் ஒரு தடவை நேரடியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமைக்கு பிற்பாடு எந்த நிதியும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஸாஹிறாக் கல்லூரிக்குத் தான் அரச நிதியை நேரடியாக ஒதுக்க முடியாது. ஆனால் மேல் மாகாணத்தில் 59 முஸ்லிம் பாடசாலைகள் இருக்கின்றன. அவற்றில் 20 முஸ்லிம் பாடசாலைகள் கொழும்பு மாவட்டத்தில் மட்டும் இருக்கின்றது. இந்தப் பாடசாலைகளுக்கு எந்த முஸ்லிம் அரசியல் தலைமைகளோ, அமைச்சர்களோ போதியளவு பௌதீக வளங்களை பெற்றுக்கொடுக்கவில்லை என்பது தான் உண்மை. கொழும்பு மாவட்டத்தில் 08 முஸ்லிம் பாடசாலைகள் இருநேரம் கல்வி கற்பிக்கப்படுகின்ற பாடசாலைகளாக இருப்பதனால் கொழும்பு முஸ்லிம்கள் கல்வியைப் பெறமுடியாதுள்ளது. அது மட்டுமல்ல கற்பதற்கு உகந்த நேரம் காலை நேரம். ஆனால் மாலை நேரத்தில் கல்வி போதிக்கப்படுவதனால் மாணவர்களுக்கு உரிய முறையில் கற்றுக் கொள்ள முடியாத சூழ் நிலை காணப்படுகிறது இதுவும் முஸ்லிம்களின் கல்வி வீழ்ச்சியடைந்தமைக்கு. வீழ்ச்சியடைந்து கொண்டு வருகின்றமைக்கு காரணம் எனக் குறிப்பிட முடியும்.

*சமகாலத்தில் சாஹிராக் கல்லூரி, நிர்வாகம் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகள், பௌதீக வளப்பற்றாக்குறை என்ன என்பதை தங்களால் அடையாளப்படுத்த முடியுமா?*

இங்கு சுமார் நாலாயிரம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். தமிழ், சிங்கள, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் இங்கு கல்வி போதிக்கப்படுகின்றது. இங்கு கல்வி கற்கின்ற மாணவர்களுள் 80 சதவீதமானோர் சிங்கள மொழியிலே கற்கின்றனர். பௌதீக வளப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக ஆளுனர்கள் சபை மேற்கொண்ட துரித முயற்சியின் காரணமாக 22 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 04 மாடிக்கட்டிடம் அமைக்கப்படவிருக்கின்றது. அதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஓரளவுக்கு வகுப்பறைப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்ய முடியும் என்பது எமது எதிர்பார்ப்பு. மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட நிர்மாண வேலைகள் நடைபெற ஒப்பந்தக்காரர்களுடன் பேசப்பட்டு விட்டது. இன்னும் இரண்டு மாதங்களுக்குள் அதனை முடிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம். அதற்கான பணமும் கைவசம் உள்ளது இக்கட்டிடமும் முடிக்கப்பட்டால் வகுப்பறை பிரச்சினை ஓரளவுக்கு தீர்ந்து விடும். ஸாஹிறாக் கல்லூரி எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளை சமூக நலன் விரும்பிகள் முன்வந்தால் - தீர்த்து பெரும் கல்விக்கூடமாக இதனை மாற்ற முடியும்.

*கொழும்பு முஸ்லிம்களின் கல்வி நிலைபற்றி என்ன கூறவிரும்புகின்றீர்கள்.....?*

கொழும்பிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளின் கல்வி நிலை மிகவும் கவலைக்குரியது. ஏனென்றால் அங்கு பெரும்பான்மையான பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. இதில் மிகப் பெரும் கவலை என்னவென்றால் அரசியல் கட்சிகள் என்றாலும் சரி, அரசியல் தலைவர்கள் என்றாலும். சரி, மற்றும் சமூக சக்திகள், பல்வேறு அமைப்புகள் எல்லாமே கொழும்பை மையப்படுத்திக் கொண்டு இங்கிருந்து தான் தமது செயற்பாடுகளை ஆரம்பிக்கிறார்கள். தமது பிரதான அலுவலகங்களை கொழும்பில் தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் யாருமே கொழும்பு மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளின் அடிப்படைத்தேவைகளை நிவர்த்திக்கவில்லை என்பது தான் பெரும் மனவேதனையை ஏற்படுத்துகின்றது. இவர்கள் இனி வரும் காலங்களிலாவது இந்த விடயங்களில் அக்கறை எடுக்க வேண்டுமென இந்த இடத்தில் கேட்டுக்கொள்கின்றேன்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மையை நிரூபித்த

## தொப்பி முகைதீன்!

பாராளுமன்றத்திலே முஸ்லிம்களின் பாரம்பரிய கலாச்சார சின்னமாக ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்த அம்பாரை மாவட்டத்தின் மூத்த அரசியல்வாதி முஸ்லிம், தமிழ் மக்களின் ஒற்றுமைக்காகவும், சமாதானத்திற்காகவும் நெருக்கடியான காலகட்டத்தில் குரல் கொடுத்துவந்த முன்னாள் பிரதியமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி யூ.எல்.எம். முகைதீன் 2005 சித்திரை 1ம் திகதி இறைவனடி சேர்ந்ததால் அவருடைய 40ம் நாள் நினைவு தினத்தை முன்னிட்டு அவர் பிறந்த சம்மாந்துறை மண்ணிலே கத்தமுல் குர்ஆன் துஆப்பிரார்த்தனையும், நினைவுப் பேருரையும் முகைதீன் பௌன்டேசன் குழுவின் ஏற்பாட்டில் அதன் தலைவர் முனாஸ் காரியப்பர் தலைமையில் நடைபெற்றது.

மறைந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் உடன் இணைந்து முஸ்லிம் சமூதாயத்தின் அரசியல் விடுதலை பயணத்தை முன்னெடுத்துச் சென்றார். அவரின் அன்புக்குரிய மச்சானாக இருந்து அவருடைய இன்பதுன்பங்களில் இரண்டறக்கலந்து மர்ஹூம் முகைதீனும் செயற்பட்டார். 1994 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் திகாமடுல்ல மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃபுடன் மர்ஹூம் முகைதீனும் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். தலைவருக்கும் கட்சிக்கும் கட்டுப்பட்டு கண்ணியமான முறையிலே அரசியலை நடத்தினார்.

2000ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான நேர்முகப்பரீட்சை, தலைவர் அஷ்ரஃப் தனது கொழும்பிலுள்ள இல்லத்தில் நடத்திக் கொண்டிருந்தார். அந்த வேளையிலே சம்மாந்துறையிலிருந்து 3 மினி பஸ்களில் 100க்கு மேற்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் தொண்டர்களும் ஆதரவாளர்களும் வந்து தலைவரை சந்தித்து, இம்முறை நடைபெறும் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளராக தொப்பி முகைதீனை நியமிக்க வேண்டாம். அவரிற்கு முஸ்லிம் காங்கிரஸ் கொள்கையைப் பற்றியோ, யாப்பைப் பற்றியோ எதுவும் தெரியாது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பற்றியும் பண்டாரநாயக்காவைப் பற்றியுமே பேசுகிறார். இவரிடம் கட்சிப்பற்று இல்லை. நேர்மை இல்லை என்று கூறினார்கள்.

தலைவர் அஷ்ரஃப் வந்தவர்கள் எல்லோரும் கூறியவற்றை கேட்டதன் பின்னர் தொப்பி முகைதீனுடைய நேர்மையைப்பற்றி குறைத்துப் பேசுவதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். அவருடைய நேர்மை 99.9 வீதத்திற்கு மேலாகும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இக்கட்சியை தேர்தல் ஆணையாளர் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு சமாதான நீதவானாக ஒப்பமிட்டவர் தொப்பி முகைதீன்தான். சம்மாந்துறை முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் தொப்பி முகைதீன்தான். அவரிற்கே எல்லோரும் வாக்களியுங்கள். இதனை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் முஸ்லிம் காங்கிரசை விட்டு வெளியேறலாம் என்று அஷ்ரஃப் கூறினார். இந்த அளவிற்கு மறைந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் மர்ஹூம். யூ.எல்.எம். முகைதீன் மீது பற்றும் பாசமும் நம்பிக்கையும் வைத்திருந்தார். தலைவர் அஷ்ரஃப்பின் மறைவிற்குப் பின் அவர் முஸ்லிம் சமூதாயத்தின் அரசியல் விடுதலைக்காக உருவாக்கிய முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபட்டன. அஷ்ரஃப்பின் அரசியல் பாசறையிலே வளர்ந்தவர்கள், ரவூப் ஹக்கீமுடன் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியோடு பலரும், தலைவரின் பாரியார் பேரியல் அஷ்ரஃப்பின் தலைமையில் தேசிய ஐக்கிய முன்னணியுடன் சிலரும் பிரிந்து



சென்றனர். மர்ஹூம் யூ.எல்.எம். முகைதீன் ரவூப் ஹக்கீமுடன் முஸ்லிம் காங்கிரசோடு இணைந்து செல்வதற்கு வாய்ப்பு வசதிகள் இருந்த போதிலும்; மறைந்த தலைவரின் பாரியாரை தனித்துவிடக்கூடாது என்பதற்காக அவரோடு இணைந்து சென்று அவருடைய கையை ப்லப்படுத்தினார்.

இந்த நிகழ்வுதான் அவருடைய அரசியல் பாதையில் தளம்பலை ஏற்படுத்தியது. சுயநலன் பாராது தன்னுடைய அரசியல் எதிர்காலத்தைப்பற்றி சிந்திக்காது மற்றவர்களுடைய அரசியல் எதிர்காலத்திற்காக தன்னை அர்ப்பணித்து யாரை சிம்மாசனம் ஏற்றினாரோ அவர்களினால் அவருடைய அரசியல் குழிபறிக்கப்பட்டது. முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இருந்து வெளியேறியது எனது அரசியல் வாழ்க்கையில் விட்ட பெரும் தவறு என்றெல்லாம் என்னோடு தொலைபேசி மூலம் மர்ஹூம் முகைதீன் உரையாடியதை என்றுமே மறக்கமுடியாது.

சம்மாந்துறை மண்ணிலே பிறந்து ஓடி

**தலைவர் அஷ்ர.்.ப் வந்தவர்கள் எல்லோரும் கூறியவற்றை கேட்டதன் பின்னர் தொப்பி முகைதீனுடைய நேர்மையைப்பற்றி குறைத்துப் பேசுவதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். அவருடைய நேர்மை 99.9 வீதத்திற்கு மேலாகும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இக்கட்சியை தேர்தல் ஆணையாளர் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு சமாதான நீதவானாக ஒப்பமிட்டவர் தொப்பி முகைதீன்தான். சம்மாந்துறை முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் தொப்பி முகைதீன் தான் , அவரிற்கே எல்லோரும் வாக்களியுங்கள். இதனை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் முஸ்லிம் காங்கிரசை விட்டு வெளியேறலாம் என்று அஷ்ர.்.ப் கூறினார்.**

விளையாடி ஊருக்காக உழைத்த அந்த உத்தமரின் உடல் சம்மாந்துறை மண்ணிலே அடக்கம் செய்யப்படாதது எல்லோருடைய உள்ளங்களிலும் கவலையும், வேதனையையும் அடையச் செய்துள்ளது. மர்ஹூம் யூ.எல்.எம். முகைதீன் ஜன்னத்துல் பிர்தௌஸ் சுவனபதியை சென்றடைய அல்லாஹ் அருள் பாலிப்பானாக. ஆமீன், ஆமீன்.....

*ஏ. அப்துல் கபூர்,*

*அம்பாரை மாவட்ட முன்னாள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொள்கை பரப்புச் செயலாளர்*

# முன்னாள் தலிபான் போராளிகள் சிறையில்!

கியூபாவிலுள்ள குவான்றனாமா குடாவில் அமெரிக்க தடுப்பு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட 40 பாகிஸ்தானியர்கள் எத்தகைய குற்றப் பத்திரங்களுமின்றி பாகிஸ்தானிய சிறையொன்றில் கடந்த எட்டு மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டு வருவதாக பிரபல பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.



இஸ்லாமாபாத்துக்கு அருகில் ராவல் பிண்டியிலுள்ள அடியாலா சிறையில் பலத்த பாதுகாப்பின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு வரும் இவர்கள், பாகிஸ்தானின் நலன்களுக்கு எதிரானவர்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்படாது, பாகிஸ்தான் அரசாங்கத்தால் தடுத்து வைக்கப்படலாமென அஞ்சப்படுவ தாகவும் இப்பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது.பயங்கரமான சிறைக்கைதிகளென பிரகடனப்படுத்தப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ள இந்த இளைஞர்கள் குறித்து பாகிஸ்தானிய அரசாங்கம் அதிகளவு அக்கறை காட்டிவருவதற்கு இவர்கள் முஸாரப் அரசாங்கத்தை தீவிரமாக எதிர்த்து போராடிய பாகிஸ்தானிய முன்னாள் தலிபன் போராளிகளும் மற்றும் ஜிகாதிஸ்களும் அடங்கியிருப்பதே பிரதான காரணமாயிருக்கலா மெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அல் காய்தாவினால் திட்டமிடப்பட்டு, பாகிஸ்தானிய தீவிரவாதிகளால் 2003 காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட முஸாரப் மீதான படுகொலைத் தாக்குதல் முயற்சிகளிலிருந்து ஜனாதிபதி முஸாரப் தப்பியதாகத் தெரிவித்த புலனாய்வு வட்டாரங்கள் தாம் கடந்த வாரத்திலும் அத்தகையதொரு நடவடிக்கையினை முறியடித்ததாகவும் தெரிவித்துள்ளது. ■

அல்லாஹ்வுடைய பாதையில் தங்களுடைய பொருள்களைச் செலவு செய்வோருக்கு உவமானம் ஏழு கதிர்கள் உற்பத்தியாக்கவும் ஒவ்வொரு கதிரிலும் நூறு தானிய மணிகள் வீதம் உண்டாக்கவும் செய்யும் ஒரு தானியம் மணியை விதைத்தது போன்றதாகும். (அல்குர்ஆன்: 2:261)

மற்றவர்களின் வறுமையைப் போக்க உதவுவது தர்மம். தர்மம் செய்பவர் தாம் செய்யும் அளவைவிட அதிகமான நன்மையை அல்லாஹ்விடம் பெற்றுக்கொள்கின்றார். புகழை விரும்பி தருமம் செய்வது கூடாது.

# இவ்வுலகம் மறு உலகுக்கான விவசாயப் பூமி!



தருமத்தை பெற்றுக் கொள்பவரிடம் பெருமை பாராட்டக் கூடாது. இப்படிச் செய்வதால் பயன் அழிந்து போகிறது. வசதி இருந்தால் கொடுப்பதும். இல்லையென்றால் இனிய மொழியைக் கூறி அனுப்புவதுமே முறையாகும். தன்னிடம் தருமம் கேட்டு வருபவரை மனம் வருந்தும்படி பேசி விரட்டுவது பெரும் குற்றமாகும். பெருமைக்காக கொடுப்பதும், வாங்கியவரை அடிமையாக எண்ணுவதும் தருமத்தின் பலனை இல்லாமல் செய்துவிடும்.

இம்மை விதைப்பதற்காகவும், மறுமை அறுவடைக்காகவுமே இருக்கின்றன. அல்லாஹ்வின் திருப்திக்காகச் செய்யும் தருமம் தரமான விதையைப் போல நமக்குச் சிறந்த பலனைத் தருகின்றது. ஒருவர் எதை விரும்புகிறாரோ அதைப் பிறருக்கும் கொடுக்க விரும்புவரே உண்மை முஸ்லிம் ஆவார்.

ஏழைகள் பலன் பெற்றிட ஏழைகளுக்கு வழங்குகிறோமோ என்பதைச் சோதிக்கவே அல்லாஹ் நமக்கு பொருளை வழங்கியுள்ளான். மேலும் தருமம் தீமையை அழித்து விடுகின்றது என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். தருமம் செய்வதால் அல்லாஹ்வின் அருள் நம்மீது பொழிகின்றது. நமது செல்வமும் வளர்கிறது. இம்மையிலும் மறுமையிலும் நல்வாழ்வு கிட்டுகின்றது.

ஒரு நெல்லை விதைப்பவர் எழுநூறு நெல்மணிகளாகவும், அல்லாஹ் நாடினால் அது போல் இரு மடங்காகவும், பல மடங்காகவும் பெற்றுக் கொள்வதைப் போலத் தருமம் செய்பவர் அதன் பலனை அடைகிறார்.

**எம்.ஆர்.எம். சைபுள்ளா - நாபாவெள அவிசாவெல**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலன்னையுடன் ஒரு சம்வாதம்!



ஏ.எச்.எம். மஜீத் ஜே.பி. - மருதமுனை -02

२६.१२.२००४ ஞாயிறுதினம்;
வாரம் முழுக்க உழைத்துக் களைத்த
உழைப்பாளிகள் உறக்கம்
கலையவில்லை
காலை 8.30 மணி
நீ உன் கட்டுப்பாட்டை
இழந்து விட்டாய் உனக்கு என்ன
நடந்தது தாயே?

அறையுள் தூங்கியோர்;
வலையுடன் உன் கரையை
அண்டியோர்;
தூளியில் தூங்கிய குழந்தைகள்;
குளியலறையில் குளித்த பெரியவர்கள்;
குர்ஆனுடன் ஓதச் சென்ற சிறுவர்கள்;
முதியவர்கள் கன்னியர்கள்
அனைவரையும் பதினைந்து
நிமிடத்தில்
பதறப் பதறக் காவு கொண்டு
விட்டாயே தாயே!
ஏனம்மா இப்படிப் பலி எடுத்தாய்?

நீ அள்ளி வழங்கிய செல்வங்களால்
இந்த உலகமே செழித்ததம்மா;
இப்போது அந்த உலகத்தையே
வறிதாக்கி விட்டாயே!
கொடுத்த அனைத்தையும்
திருப்பிக்கொண்டாய்
கொடுத்தபோது வள்ளல் என்றவர்கள்
எடுத்தபோது உன்னைக் கள்ளி
என்கிறார்கள்
நீயேனம்மா காதகி யானாய்

கணவனை இகழும்
மனைவியைப்பார்த்து
பொங்கினாயா?
பெற்றவரைத் தூற்றும்
மக்களைப்பார்த்து சீறினாயா?
ஆசிரியரை அவமதிக்கும்
மாணவரைப்பார்த்து
பாய்ந்து வந்தாயா?
கொலைஞர்களைக் கொல்வதற்குக்
கொடுங்கோலைத் தூக்கினாயா?

நீதி பிறழ்ந்த நடுவர்களை பழியெடுக்க
நினைத்தாயா?
அல்லது உலகில் நிகழும்
பதவிப் போட்டி, பொறாமை
கழுத்தறுப்பு
கண்டு கலங்கி வந்தாயா?
வாக்குமாறிகள்; நம்பிக்கைத்
துரோகிகள்
சூதாடிகள், வீணர்கள் இவர்களை
வீழ்த்துவதற்கு வீதிக்கு வந்தாயா?

அக்கிரமங்களையும்
அநியாயக்காரர்களையும் கண்டு
ஆக்ரோஷமடைந்தாயா தாயே!
உழைப்பாளிகளைச் சுரண்டுவோர்
ஊதாரிகளைச் சுமந்து நிற்போர்
சுயநலமிகளுக்குச் சாமரம் வீசுவோர்
பாவங்களுக்குப் பயப்படாதோர்
அபயம் தேடிவந்தவர்களை அடித்து
விரட்டியோர்
இவர்களுக்குப் பாடம் புகட்ட
பாயும் புலியாகப் பதுங்கிவந்தாயா
தாயே!

உழைப்பு எதுவுமில்லாமல்
வட்டியையும் வயிற்றையும்
வளர்த்துக் கொண்டிருக்கும்
குட்டிக்கணக்கர்களை
குதறிடவந்தாயா?

அழித்து உன்னைக்
கறைபடுத்திக் கொண்டாயே தாயே!

இந்த மனித நேயங்களுக்கு
சிரம்தாழ்த்தி
நாங்கள் நன்றி சொல்கிறோம் தாயே!
பனைமர உயரத்துக்கு நீ கொந்தளித்து
வந்தபோது
அபயம் அபயம் என்று அலறிக்கொண்டு
ஓடிவந்த
அவலம் தோய்ந்த அகதிகளுக்கு,
அபயமளிக்க மறுத்த
நல்லவர்களை
அடையாளப் படுத்தினாய் தாயே!

நீ எவ்வளவு அழகானவள் தாயே!
இப்படி அலங்கோலமாகிவிட்டாயே
உன்னை அண்டியிருந்த அழகிய
வீதிகள் எங்கே?
விடியும் வரை ஒளிகாலும்
மின்விளக்குகள் எங்கே?
கடைவீதியின் சனத்திரள் எங்கே
நாதியற்று நாயும் உன்னைத்
தீண்டாதபடி
நாறிக்கிடக்கிறாய் தாயே!
உன்னருகில் வர நெஞ்சு 'படக்படக்'
கென்கிறது
உன்சுனாமியை மீண்டும்
ஆரவாரமின்றி
அவிழ்த்து விடுவாயோ என்ற பயம்
வியர்த்துக் கொட்டுகிறது.

கடல் அன்னையே! நீ விடுத்துள்ள
சவாலை
எஞ்சியுள்ள நாங்கள் தைரியமாக
ஏற்கிறோம்
மீண்டும் உயிர்த்தெழுவோம்
இழந்தவற்றைக் கட்டி எழுப்புவோம்
அணுகுண்டால் அழிந்து போன
ஹிரோஷிமா,
நாகசாகி போல
நேச அணிகளால் சிதைந்து போன
நாஜி
ஜேர்மன்போல
நிர்மாணிப்போம் அதற்காக
இரவும் பகலும் உழைப்போம்!

மனிதன் உருவாக்குவதை இயற்கை
அழிப்பதும்
இயற்கை உருவாக்குவதை மனிதன்
அழிப்பதும்
உலக நியதிகள்
அந்த நியதிகளுக்கும் விதிகளுக்கும்
கட்டுப்படுவோம்!

# ஆக்கிரமிப்பாளர்களுக்கு சுடுகாடான ஈராக்!


அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்குப் பின் ஈராக்கில் அரசாங்கமொன்று அமைத்திருந்தாலும், நாட்டின் பல பாகங்களில் நடைபெறும் வன்செயல்களுக்கு குறைவே இல்லை. ஈராக்குக்கு வரும் வெளிநாட்டவர்களைக் கடத்திச் சென்று பணயக் கைதிகளாகப் பயன்படுத்துகின்ற செயல்கள் தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றன. ஈராக்கில் அமெரிக்க படையினருக்கும் போராளிகளுக்கும் இடையில் நடைபெறுகின்ற மோதல்களும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. ஈராக்கில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த டோக்கியோவில் பிறந்த அகினிடோ சைட்டோ என்ற ஜப்பானின் தேசிய பாதுகாப்பு ஊழியர் அண்மையில் கடத்தப்பட்டுள்ளார்.



ஈராக்கில் நடந்த மோதல் ஒன்றில் காயமடைந்து இருக்கும் பொழுதே ஜப்பான் பிரஜையைக் கடத்தி செல்லப்பட்டதாக கூறப்படுகிறது. இதற்கு முன்னர் 4 பிரஜைகள் போராளிகளால் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டனர். 4பேரில் இருவர் ஊடகவியலாளர்கள்.

சதாம் ஹுசைனின் ஆட்சியை கவிழ்ப்பதற்காக அமெரிக்கா ஆரம்பித்த யுத்தத்தின் பின்பு இதுவரை ஈராக்கில் 1600 வெளிநாட்டவர்கள் தம்முடைய உயிரைப் பலிகொடுத்துள்ளனர். இதன் மூலம் வெளிநாட்டவர்களுக்கு ஈராக் சுடுகாடாக விளங்குகின்றது. இதற்கிடையில் கடந்த நாட்களில் நடத்தப்பட்ட யுத்த நடவடிக்கையினால் 75 போராளிகளை தாம் கொன்றுள்ளதாக அமெரிக்கா கூளுரைக்கிறது.

# முஸ்லிம் நாடுகள் மீதான ஐ.நாவின் ஓரப்பார்வை!



தற்பொழுது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் 'வீட்டோ' அதிகாரத்துடன் நிரந்தர உறுப்பினர்களாக இருக்கும் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு மேலதிகமாக சில நாடுகளை நிரந்தர உறுப்பினர்களாக நியமிப்பது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை ஆழமாக சிந்தித்து வருகிறது. இந்த விடயத்தில் பாகிஸ்தானுக்கும், ஈரானுக்கும் வீட்டோ அதிகாரத்துடன் நிரந்தர உறுப்புரிமை வழங்குமாறு "கோரி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கொபி அனானுக்கு மத்திய தென்னக்கும்புர வை.எம்.எம்.ஏ. இயக்கம் கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

அத்துடன் டென்மார்க் மகாராணி இரண்டாம் மாக்கிரத் 'நாம் இஸ்லாத்திற்கு எமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும்' என்ற தலைப்பில் இஸ்லாத்திற்கு எதிராக பகிரங்கமாக ஒரு பத்திரிகைக்கு பேட்டியளித்துள்ளார். இவ்ரின் நியாயமற்ற கருத்துக்கு எமது இயக்கம் எதிர்ப்புத் தெரிவிக்கிறது.

அவுஸ்திரிய உள்விவகார அமைச்சர் லீசே புரொகொன், முஸ்லிம் ஆசிரியைகள் அவுஸ்திரிய பாடசாலைகளில் ஹிஜாப் அணிவதை தடைசெய்யும் சட்டத்தை எந்தத் தடங்கல் வந்தாலும் கட்டாயம் நிறைவேற்றப் போவதாக எச்சரிக்கை செய்துள்ளார். இவரின் நியாயமற்ற இச்செயலைக் கண்டித்தும் எமது இயக்கம் அவருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

இஸ்ரேல் சியோனிஸ்ட்களின் அல்-அக்ஸா பள்ளிவாயல் மீதான ஆக்கிரமிப்பும், பலஸ்தீன முஸ்லிம்கள் மீது நடத்தும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களுக்கும், படுகொலைகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து பலஸ்தீன விவகாரத்தில் உலக முஸ்லிம் நாடுகள் நேரடியாக தலையிட்டு பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கக்கோரி உலக முஸ்லிம்களுக்கு எமது இயக்கம் கடிதம் அனுப்பியுள்ளது.

உலகில் முஸ்லிம் நாடுகள் 50 இற்கு மேல் இருந்தபோதிலும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் எந்த ஒரு முஸ்லிம் நாட்டுக்கும் இதுவரை நிரந்தர உறுப்புரிமை வழங்கப்படவில்லை.தற்பொழுது முஸ்லிம் நாடுகளுக்கு எதிராக அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகள் மேற்கொள்ளும் ஆக்கிரமிப்புக்களை எதிர்த்து, தட்டிக்கேட்கும் ஆற்றல் இன்மைக்கு பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை முஸ்லிம் நாடுகளுக்கு இல்லாமையே பிரதான காரணமாகும். அத்துடன் உலகின் பல முக்கிய தலைவர்களுக்கும் இவ்விடயம் தொடர்பாக கூடிய கவனம் செலுத்துமாறு வலியுறுத்தி வருகிறோம். இவ்விடயம் தொடர்பாக இலங்கை முஸ்லிம்களிடம் நாம் கேட்டுக்கொள்வது என்னவென்றால் உங்களால் முடிந்த அளவு சம்பந்தப்பட்டவர்களுக்கு அழுத்தங்களைக் கொடுங்கள் என்பதுதான் எமது கோரிக்கை.

ஏ.ஏ.முஹம்மட் நாகூர்பிச்சை
வை.எம்.எம்.ஏ.இயக்கம்

## அரசாங்கத்தை காப்பாற்ற ஜே.வி.பி யின் யோசனைகள்!

கூட்டமைப்பு அரசாங்கத்தின் கொள்கைகளை காப்பாற்றுவதற்கான புதியயோசனைகளை ஜே.வி.பி. ஜனாதிபதி உள்ளிட்ட அரசின் முக்கியஸ்தர்களுக்கு முன்வைப்பதற்கு உத்தேசித்துள்ளதாக ஜே.வி.பி. வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

முஸ்லிம் குரல்
MUSLIM KURAL
படிப்பாளிகள் கவனத்திற்கு!
தேவைப்படுவோர்!
1-60 இதழ்கள் (பைண்டிங் தொகுப்பு)
ரூபா. 1000/- க்கான காசுக்கட்டளை/ காசோலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களின் நலன்கருதி

## ஒற்றுமையுடன் செயற்படுவார்களா?

சிங்களம் மட்டும் சட்டம் அமுலுக்கு வந்து ஐம்பது வருடத்துக்குள் நாட்டில் சகல இனமக்களும் பல்வேறுபட்ட பயங்கரமான விளைவுகளை தொடர்ந்தும் அனுபவித்துக்கொண்டே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க பல்வேறு நடவடிக்கைகளை பதவிக்கு வந்த அரசாங்கங்கள் மேற்கொண்டுள்ளன. ஆனால் இதுவரை எவ்விதமான பலனும் கிடைக்கவில்லை. ரணில் அரசாங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தம் புலிகளுடன் செய்து கொண்டு ஆறு சுற்றுப்பேச்சுவார்த்தைகள் நடத்தியது. ஆனால் அதிகாரம் ஜனாதிபதியின் கையில் இருப்பதாலும் ரணிலின் அரசாங்கம் சிறந்த முறையில் செயல்படாததினாலும் ஆட்சியைக் கலைத்து தேர்தலை நடத்தி தற்போதைய கூட்டு அரசாங்கம் அமைக்கப்பட்டது. இப்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிப்போர் பலகொள்கை உடையவர்களாகச் செயல்படுகின்றார்கள். ஒருவருக்கொருவர் எதிராக அறிக்கைகளை, கொள்கைகளை வெளியிடுகின்றனர்.

சமாதானப் பேச்சுவார்த்தை இன்னும் நூறுவருடங்கள் வேண்டுமானாலும் பேசிக்கொண்டிருக்கலாம், தீர்வுகாண்பதென்பது பகல் கனவுதான். யுத்தத்தினாலும்



சுனாமியினாலும் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் முஸ்லிம்களே. பொதுக்கட்டமைப்பின் மூலம் நிவாரணப் பணிகள் தொடர்ந்து நடைபெறும் என்பதும், அது சாத்தியமாகும் என்ற நம்பிக்கையும் மிகவும் குறைவாக உள்ளது. பிரிந்துள்ள முஸ்லிம் கட்சிகள் ஒன்றாகச் சேர்ந்து ஒற்றுமையுடன் முஸ்லிம்களின் துன்பங்கள், துயரங்கள், அபிலாசைகள், உரிமைகள் போன்றவைகளுக்காக ஆட்சியிலிருக்கும் அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி தக்க நடவடிக்கை எடுத்தால் மட்டுமே வழி கிடைக்கும். இதற்கு மாறாக முஸ்லிம் தலைவர்களும், அரசியல்வாதிகளும் சுயநலத்திற்காக செயற்பட தொடர்ந்தும் முயன்றால் ஏற்கனவே சகல துறைகளிலும் ஏனையவர்களை விட பின்னணிவகிக்கும் முஸ்லிம்கள் மேலும் பல பாதிப்புக்குள்ளாவது தவிர்க்க முடியாது விடும்.

ஆகையால் முஸ்லிம் தலைவர்கள், அறிஞர்கள், புத்திஜீவிகள் தெளிவுடனும் விழிப்புடனும் செயற்பட்டு வ்ருங்கால சந்ததியினரின் நலன் கருதி ஒற்றுமையுடன் ஒரு கொடியின் கீழ் செயற்பட வேண்டுமென்பதே முஸ்லிம் மக்களாகிய எங்களது எதிர்பார்ப்பாகும்.

எம்.எஸ்.எம். ராஸீக்
நாபாவெள, அவிசாவெல.

---

# சோகம் தீருங்கள்!



சுனாமி என்றொரு
சோதனை நிகழ்ந்து
அனாதையாய்ப் பலபேர்
அலையவும் நேர்ந்தது!

காணாத கவலைகள்
கடலலை தந்தது
போனாலும் போனது
பல தொல்லையானது!

உயிரோடு தப்பியோர்
உள்ளத்தை இழந்தனர்
பயிரான பிஞ்சுகள்
பலியாகி மாண்டனர்

வயிராற உண்ணுவோர்
வழியின்றி வாடுவோர்
முயற்சிக்கு வழிசெய்ய
முயலுவாறில்லையே!

அகதியாய்க்குடிசையில்
அல்லலில் மாய்வோர்
முகமதிற் புன்னகை
மருந்திற்கும் காண்கின்றோம்
சுகமாக வாழுவோர்
சிந்திப்பார் யாருண்டு
அகந்தனில் எண்ணுவோர்
உண்மையிற் கவிஞரே!

இனிமேலும் இவர்களின்
இன்னல்கள் தீருமோ
அநியாயம் அகதிகள்
அவர்குறை மாறுமோ!
புனிதமாம் புண்ணியம்
புரிவோரே வாருங்கள்
சுனாமியிற் சிக்குண்டோர்
சோகத்தைத் தீருங்கள!

மூதூர் கலைமேகம்

---

## புத்தளம் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியை அதிகரிக்க நடவடிக்கை!

புத்தளம் மாவட்டத்திலுள்ள தமிழ்மொழிப் பாடசாலைகளின், குறைபாடுகளை அகற்றுவதற்கு அமைச்சர் ரிசாட் பதியுதீன் நடவடிக்கை எடுத்துள்ளார். இதனால் புத்தளம் மாவட்ட மக்களும், இடம்பெயர்ந்து வாழும் மக்களும் கல்வி வளர்ச்சியில் அதிக நன்மை அடையவுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்திலுள்ள பெரும்பாலான தமிழ்மொழிப் பாடசாலைகளில் உயர்தர, சாதாரண தர பரீட்சைகளை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கு கற்பிப்பதற்கான தகைமைபெற்ற ஆசிரியர்கள் இன்மை பெரும் பிரச்சினையாக உள்ளது. பெருமளவிலான பாடசாலைகள் பௌதீக வளப்பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளது இவற்றை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு அமைச்சர் உரிய நடவடிக்கை எடுத்துள்ளார்.

வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு புத்தளத்தில் குடியேறிய கடந்த 14 வருட காலகட்டத்தில் புத்தளம் மாவட்டத்திலுள்ள அனேக பாடசாலைகள் பெருமளவில் கல்வி வளப்பிரச்சினையை எதிர்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

புத்தளம் செய்தியாளர்

---

## தமிழ் மொழிமூல புலமைப்பரிசில் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு!

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்காக கொழும்பிலுள்ள பிரபல புத்தக வெளியீட்டு நிறுவனமான காயத்திரி பதிப்பகம் எதிர்வரும் ஜூலை மாதம் இலவசமாக கருத்தரங்கு ஒன்றினை நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

இக்கருத்தரங்கில் பொலன்நறுவை மாவட்ட தமிழ்மொழி மூல சகல பாடசாலை மாணவர்களும் கலந்துகொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திவுளானை நபீல் - பொலன்நறுவை

---

# சொன்னார்கள்!



## எஸ்.பியை விடுவிக்க முதலில் போராடுங்கள்!



இவ்வருட இறுதியில் ஜனாதிபதி தேர்தலை நடாத்தாமல் விட்டால் இலட்சக்கணக்கான மக்களைத் திரட்டிப் போராடுவோம்! இந்த விடயத்தில் எந்த சவாலையும் நாம் எதிர்கொள்ளத் தயார்!

ரணில் விக்கிரமசிங்க - டெய்லி மிரர் -11 மே 2005

## இது எப்படி இருக்கிறது?



முஸ்லிம் தனி அலகுக்கு பிரபாகரன் பச்சைக்கொடி

நவமணி-15 மே

## இன்னும் உணரவில்லையே!

நாட்டின் அரச கரும மொழியாக சிங்களத்தை பிரகடனப்படுத்துவதன் மூலம், தமிழ் மக்களுக்கும் ஏனைய சிறுபான்மை மக்களுக்கும் ஏற்படக்கூடிய சிரமங்களையோ, அதிருப்திகளையோ பண்டாரநாயக்கா பொருட்படுத்தவில்லை. இலங்கையின் தேசிய மதமாக பௌத்த மதத்தை சட்டபூர்வமாக்குவதன் மூலம், இலங்கையில் வாழ்ந்து வந்த இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தோரின் உணர்வுகள் குறித்தோ, அவர்களுக்குரிய நிலைகுறித்தோ பண்டாரநாயக்கா கிஞ்சித்தேனும் கவனம் செலுத்தவில்லை!

லீகுவான்யூ - சிங்கப்பூர் முன்னாள் பிரதமர்
(எனது நினைவுக்குறிப்புகள் சுயசரிதை-பக் - 460)

## யார் புஷ்?



பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கிக் கொள்வது, அமெரிக்க ஜனாதிபதி புஷ் ஷுக்கும் அல்குவைதா அமைப்பின் தலைவர் பின்லேடனுக்குமிடையில் செய்து கொள்ளும் உடன்படிக்கை போன்றது அப்படி ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்த ஜே.வி.பி. ஒருபோதும் அனுமதிக்காது!

விமல் வீரவன்ச - 02 மே 2005 லங்காதீப.

## உலகளவில் செய்யப்பட வேண்டிய பணி!

உலகப் பண்பாட்டிற்கும் மனித சிந்தனை வளர்ச்சிக்கும் முஸ்லிம் பண்பாடு என்ன வழங்கியது என்ற வினா சிலரால் அமெரிக்க இரட்டைக் கோபுரம் தாக்கப்பட்டபோது எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளிக்கப்படவேண்டியது நமது கடமையாகும்.

கலாநிதி அனஸ்-பேராதனைப் பல்கலைக்கழகம்.

## எல்லாம் உங்கள் சௌகரியமே!



பொதுக்கட்டமைப்பு விடயத்தில் என்ன முரண்பாடுகள் இருப்பினும் அது குறித்து இறுதி முடிவை சந்திரிக்காவே எடுப்பார். இப்பொதுக் கட்டமைப்பை இலங்கை அரசு உருவாக்காமல் விட்டால் மாற்று நடவடிக்கைகளை உதவி வழங்கும் நாடுகள் மேற்கொள்ளும்!

யசூசி அகாசி -
கிளிநொச்சியில் வைத்து
ஊடகங்களுக்கு தெரிவித்தது - 14.05.2005

## சொல்வதற்கும் துணிச்சல் வேண்டும்!



சிங்கள நீதிமன்றத்தால் எமது தலைவர் பிரபாகரனுக்கு வழங்கப்பட்ட 200 வருடத் தண்டனையை நாம் ஒரு போதும் ஏற்கமாட்டோம்! விரைவில் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் சட்டபூர்வமான தமிழீழ தனியரசு ஒன்றை உருவாக்குவோம்.

பாராளுமன்றத்தில் ஈழவேந்தன்-எம்.பி. 04 மே 2005.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் சமாதான செயலகம் நீடித்து நிற்குமா?



சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், தே.ஐ. முன்னணியின் தலைவியும் இணைந்து ஆரம்பித்திருக்கும் 'முஸ்லிம் சமாதான செயலகத்தினைப்' பற்றியும் அது மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பற்றியுமான கருத்துக்கள் மேலோட்டமாக ஏதோ பாரிய நன்மைகளை நமது நாட்டு முஸ்லிம்களுக்கு செய்யப்போகின்றன என்கிற தோற்றப்பாட்டை காட்டிவருகிறது.

எனினும் இச்சமாதான செயலகம் உண்மையில் எதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதை நாம் அலசி ஆராய்ந்தால்; இதனால் எதிர்காலத்தில் நமது நாட்டு முஸ்லிம்களுக்கு ஒரு சதவீத நன்மைகளைத்தானும் பெற்றுத்தர முடியாதென்பதைக் கண்டுகொள்ளமுடியும். உவமானமாக இக்கட்சிகளின் கடந்த கால நடவடிக்கைகளையும், இக்கட்சிகளை வழிநடத்திக் கொண்டிருக்கும் தலைமைகளின் செயல் ரீதியான திட்டங்களையும் கொண்டு தான் நாம் இப்படிக் கூறுகின்றோம்.

துணிச்சலாக எதையுமே இவர்களின் சாதனையென்று எவருமே கூறமுடியாததொரு அரசியலையே கடந்த ஐந்து வருடங்களாக இவர்கள் செய்து வருகின்றனர். விடயம் இப்படியிருக்க இப்போது இவர்கள் இரண்டு பேரும் தனித்தனியாக செய்தசேவைகள் போதாதென்று இணைந்து செய்வதற்காக புதிதாக 'முஸ்லிம் சமாதான செயலக'மொன்றை ஏற்படுத்தி புதியதொரு கோணத்தில் மீண்டும் முஸ்லிம்களை ஏமாற்ற 'அறிக்கைச் சேவைகளை' தாராளமாகச் செய்து வருகின்றனர். யதார்த்தமாக நாம் பார்ப்போமானால் நாளை மற்றுமொரு தேர்தல் வந்தால் மு.கா. தலைவர் ஹக்கீம் ஐ.தே.முன்னணிக்காகவும், அமைச்சர் பேரியல் அஷ்ரப் பொ.ஐ.முன்னணிக்காகவும் பிரச்சாரம் செய்து ஆளை ஆள் தூற்றி அரசியல் அறிக்கைகளை விடுவார்கள். அப்போது இந்த முஸ்லிம் சமாதான செயலகத்தின் நிலை எவ்வாறு இருக்கும்? இவர்கள் இருவரும் யாரை ஏமாற்றப்பார்க்கிறார்கள்? இன்றும் கூட எதிரும் புதிருமாக மாறுபட்ட கருத்துக்களைக் கூறிவரும் இவர்கள் இருவருமே; அதன் மூலமாக தமது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்ளவே அதனைச் செய்து கொண்டு வருகிறார்கள் என்பதில் சந்தேகமேதுமில்லை.

> **துணிச்சலாக எதையுமே இவர்களின் சாதனையென்று எவருமே கூறமுடியாததொரு அரசியலையே கடந்த ஐந்து வருடங்களாக இவர்கள் செய்து வருகின்றனர். யதார்த்தமாக நாம் பார்ப்போமானால் நாளை மற்றுமொரு தேர்தல் வந்தால் மு.கா.தலைவர் ஹக்கீம் ஐக்கிய தேசிய முன்னணிக்காகவும், அமைச்சர் பேரியல் பொ.ஐ.முன்னணிக்காகவும் பிரச்சாரம் செய்து ஆளை ஆள் தூற்றி அரசியல் அறிக்கைகளை விடுவார்கள்.**

கடந்த காலங்களைப் போல் எதிரே வருகின்ற காலங்களும் இருக்கும் என்று எவரும் தப்புக்கணக்குகள் போட்டுவிடக்கூடாது.

ஒருவனுக்குக் கஷ்டம் வரும்போதுதான் உண்மையான நண்பன் யார்; எதிரி யார் என்று அறிந்து கொள்ள முடியும். அதேபோன்றுதான் இன்று சுனாமியினால் பாதிக்கப்பட்ட கிழக்கின் கரையோர முஸ்லிம் மக்களின் நிலைமையும் இருக்கின்றன. தமக்கு ஏற்பட்ட இந்த பாரிய அழிவுகளுக்காக யார் உண்மையாக தோள்கொடுக்கின்றாரோ அந்தத்தலைவர்களுக்கே மக்கள் தமது ஆதரவுகளை வழங்குவார்கள் என்பதுதான் யதார்த்தம். மாறாகவெறும் அறிக்கைகளையும், வார்த்தை ஜாலங்களையும் கொண்டு மீண்டும் மக்கள் முன் சென்றால் இந்தத் தலைமைகள் பாரதூரமான எதிர்விளைவுகளையே சந்திக்க நேரிடும் என்பதில் சந்தேகமில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே கருத்து முரண்பாடுகளுக்கு மத்தியில் மக்களுக்கு குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய எந்த முக்கியமான சேவைகளையும் இதுவரைகாலமும் செய்திடாத முஸ்லிம் சமாதான செயலகத்தின் தலைவர்களான ஹக்கீம், பேரியல் போன்றவர்களதும் இன்னும் அவர்களோடு சேர்ந்திருக்கும் அணியினர்களினதும் மாறுபட்ட கருத்துக்களாலும், மக்களின் எதிர்பார்ப்பின்மையாலும், ஏனைய முஸ்லிம் தலைவர்களின் ஒத்துழைப்பின்மையாலும் முஸ்லிம் சமாதான செயலகம் ஸ்தம்பிதமடையக்கூடியதொரு நிலையே தென்படுகின்றது.

சிலரை சில காலம் ஏமாற்றலாம். பலரை பலகாலம் ஏமாற்றலாம். ஆனால் சமூகத்தை எல்லோரும் எந்நாளும் ஏமாற்ற முடியாதென்பதை வெகு சீக்கிரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

எம்.எல்.எம். முஸ்தபா.
மருதமுனை

# கோபத்தினால் ஆயுள் குறையும்!

இன்று எமது சமூகத்தில் அதிகமானோர் சிறியதோர் விடயத்திலும் அதிக கோபத்திற்குள்ளாகின்றனர். அன்றாடம் பேருந்துகளிலும், சந்தையிலும், பாதைகளிலும், வேலைத்தளங்களிலும் மற்றும் வீட்டிலும் நாம் அதிகளவில் கோபப்படுவதனால் எமது பல அன்றாட பணிகளை குழப்பிக் கொள்கிறோம். அதன் பெறுபேறுகளும் சிலவேளைகளில் நமது எதிர்பார்ப்புக்கு மாற்றமாகவே இருக்கும். மேலும், கோபப்படுவதனால் முதுமை ஏற்படும் என்றும் கூறப்படுகிறது.

அதிக கோபமானது சமூக ரீதியிலும், உடலியல் மற்றும் உளவியல் ரீதியிலும் அதிக பாதிப்புகளை ஏற்படுத்தும். முன் கோபமானது மோதல்களுக்கும், உடனடி மரணத்திற்கும் வழிகோலும். இதுவோர் சமூக ரீதியான பாதிப்பாகும்.



செயற்பாடுகள் குறைவுபடல் போன்ற நோய்களுக்கு உயர் இரத்த அழுத்தமானது நேரடியான பாதிப்பினை ஏற்படுத்தும். இத்தகைய நோய் நிலைகள் காரணமாக ஆயுள் குறையும்.

புதிய ஆய்வுகளின்படி நீரிழிவு நோய்க்கு உயர் மன அழுத்தமே முக்கிய காரணமாக கொள்ளப்படுகிறது. இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரிப்பினால் நீரிழிவு ஏற்படுகிறது. ஆகவே, உயர் மன அழுத்தத்தினை கட்டுப்படுத்த வேண்டுமானால் கோபத்தினை கட்டுப்படுத்த வேண்டும். அப்போது மன அழுத்தத்துடன் தோன்றும் நோய்களை தவிர்த்துக் கொள்ளமுடியும்.

ஆழிப்பேரலையில் ஆழப் போய்விட்டது
அடிப்படை உரிமைகள்.
ஆயுத கலாச்சாரத்தில் அழிந்து விட்டது
அரசியல் உரிமைகள்.

கொடூர வக்கிரக்காரர்களின்
கோரவலையில்
சிக்கித் தவிக்கின்றன
சிறுவர் உரிமைகள்.
சின்னாபின்னமாக சேற்றில்
புதைக்கப்பட்டுள்ளது
பெண்ணுரிமைகள்.
புதை குழிக்குள் சுருண்டு கிடக்கிறது
பொருளாதார உரிமைகள்.




நமது சமூக நிலையோ!?
நிர்க்கதி....

கலங்குகிறேன் கலங்குகிறேன்
கலங்கிய குட்டைக்குள் அமைதியைத்
தேடி கலங்குகிறேன்

சிரிக்கிறேன் சிரிக்கிறேன்
இவர்களின் வலையில்
சிக்கிக் கிடக்கும் மக்களை
எண்ணிச் சிரிக்கிறேன்.

சிந்திக்கிறேன் சிந்திக்கிறேன்
அப்பாவிப் பொதுமக்களின்
உரிமைகளை எண்ணிச்
சிந்திக்கிறேன்

விடையோ! கேள்விக்குறி
கேள்வியோ வரலாறாகிறது!

சித்தீக் றஸ்மி - அக்கரைப்பற்று 01

**ஒருவர் ஒரு கருத்தைச் சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா? நாம் எழுதுவதற்கும் நமது மக்களுக்குள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கும் விவாதங்களைத் தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களைச் சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்.**

- பிரதம ஆசிரியர் -

# மகிழ்ச்சியுடன் வாழ இன்றியமையாதது!

வாழ்க்கையில் நீங்கள் அடையும் மகிழ்ச்சியினை, திருப்தியினை மேலும் விருத்தி செய்து கொள்ள வேண்டுமா? அதற்காக கலிபோனியா பல்கலைக்கழகத்தின் 'சொன்ஜா லினுபொமர்ஸ்கி' எனும் மனோதத்துவ நிபுணரினால் நடத்தப்பட்ட பல்வேறு ஆய்வுகளின் அடிப்படையில், மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு பின்வரும் எட்டு அம்சங்களை முன்வைத்துள்ளார். அவையாவன;

01. வாழ்க்கையின் வெற்றிகளை கணக்கெடுங்கள்.
02. கருணையுள்ள நடவடிக்கைகளில் ஈடுபடுங்கள்.
03. சிறிதாயினும் அனுபவிப்பதற்கு பழகுங்கள்.
04. நன்றியுடையவராகுங்கள்.
05. மன்னிப்பதற்கு கற்றுக் கொள்ளுங்கள்.
06. நண்பர்களுடனும், குடும்பத்தினருடனும் அதிக நேரத்தை செலவிடுங்கள்.
07. சிறந்த உடல் நலத்தில் கவனம் செலுத்துங்கள் .
08. மன அழுத்தம் மற்றும் கஷ்டங்களுக்கு முகங்கொடுப்பதற்கான உபாயங்களை திட்டமிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகற் கொள்ளை வேண்டாம்!

# ஹலால் மணம் புரிவோம்!

நமது பிள்ளைகளை நல்ல முறையில் வாழ வைப்பது பெற்றோர்களாகிய நமது கடமை என்பதை எவராலும் மறுக்க முடியாது! நமதுபிள்ளைகள் மார்க்க அறிவுடைய, கல்வியறிவுடைய பிள்ளைகளாக வர வேண்டுமென்பதில் நாம்அதிக அக்கறை காட்டி வருகின்றோம். இச்செல்வங்களின் துஆக்கள் எங்களுக்கு கிடைக்கவேண்டுமென்றும் எதிர்பார்க்கிறோம். ஆனால் திருமணம் என்ற வாழ்க்கையின் முதற் படிக்கு கொண்டு செல்கின்ற போது இஸ்லாம்அனுமதிக்காத முறையிலேயே கொண்டு செல்கின்றோம். இஸ்லாம் ஒருவன் எப்படித்திருமணம் முடிக்க வேண்டும் நமது சொத்துக்கள் நமது பிள்ளைகளுக்கு எப்படி பிரிக்கப்பட வேண்டுமென்பதை மிகவும் அழகான முறையில் சொல்கின்றது. இது பெற்றோர்களாகிய நாமனைவரும் அறிந்த உண்மையே.

நமது சமூகக் கட்டமைப்பிற்கு உட்பட்டு, நாம், அந்நிய மதக் கலாசாரங்களுக்கு முக்கிய இடம் கொடுத்து நமது பிள்ளைகளின் வாழ்க்கையின் முதற்படியான திருமணத்தை இஸ்லாத்திற்கு மாறான முறையில் நடத்தி வைக்கின்றோம். இதை அல்லாஹ் ஏற்றுக் கொள்வானா? அவர்களது வாழ்க்கை இஸ்லாத்திற்கு உட்பட்டதாக அமையுமா? இதில் பிறக்கும் பிள்ளைகள் ஹலாலாக அமையுமா? இப்படியான பிள்ளைகளால் கேட்கப்படும் துஆக்கள் அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்டு அதன் பலன் நமக்குக் கிடைக்குமா? இப்படியான பல கேள்விகளுக்கு பதில் தேடவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியிருக்கிறோம்.

நாம் அனைவரும் அறிந்தோ அறியாமலோ தவறிழைத்தவர்களாக இருக்கின்றோம். நமது பிள்ளைகளையம் தவறான வழிக்கு இட்டுச் செல்லாமல் காப்பாற்றுவோம். இஸ்லாம் திருமணம் பற்றி என்ன சொல்கிறது? சொத்துக்களை பிள்ளைகளுக்கு பிரித்துக் கொடுப்பது பற்றி என்ன சொல்கிறது? என்பது பற்றி தேடிப்பார்ப்போம். அதன் படி நடந்து நமது பிள்ளைகளை நல்வழிக்கு இட்டுச் செல்ல நாம் முன்னிற்போம். நாம் கல்வியறிவு அற்றவர்கள் அல்லர்; விளிப்படைவோம்! எம்மை முட்டாள்கள் என்று அடுத்துவரும் சமூகங்கள் ஏசாமல் இருக்க இன்றே இஸ்லாம் சொல்கின்ற படி நடைமுறைப்படுத்துவோம். நிச்சயமாக எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்கு ஆதரவளிப்பான்.

நாம் ஈமான் கொண்டவர்கள். நாம் நமது ஈமானைப் பலமுடையதாக ஆக்க வேண்டுமென்றால் அல்லாஹ் ஏவியதை எடுத்து நடப்பதோடு விலக்கியதை விலக்கியும் நடக்க வேண்டும். இவற்றில் இருக்கும் உறுதியே நமது ஈமானைப் பலமடைய வைக்கிறது. ஏவியதொன்றை எடுத்து நடக்க வில்லையோ, அல்லது விலக்கியதொன்றை விலக்கி நடக்க வில்லையோ அச்சந்தர்ப்பங்களில் தான் நமது ஈமான் நலிவடைகின்றது. ஈமானில் சரிவு ஏற்படுகின்றது. நலிவடைந்த, சரிவு கண்ட ஈமானால் செய்யப்படும் அமல்களை அல்லாஹ் ஏற்றுக்கொள்வானா? நாம் சுவர்க்கம் புக முடியுமா? நன்றாக சிந்தித்துப் பாருங்கள்.

நாம் ஈமானைப் பலமுடையதாக ஆக்கும் வழியில் செல்வோம். எமது பிள்ளைகளையும் அதன் பாதையில் கொண்டு செல்வோம். எல்லாம் வல்ல அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பான். இஸ்லாம் காட்டும் எவ்வழியாக இருந்தாலும் அது இலகுவான வழிதான். திருமண விடயத்திலும் மிகமிக இலகுவான வழியைத்தான் இஸ்லாம் காட்டியிருக்கின்றது. நாம் ஏன் பின்பற்றாதிருக்கிறோம். இன்றே பின்பற்றுவோம். பெண்பிள்ளை ஒன்று பிறந்துவிட்டாலே பெரும் மலை ஒன்றைச் சுமப்பவர்களாக ஆகிவிடுகிறோம்.

ஏன் நமக்கு இவ்வாறான தொல்லை. இந் நிலைமையிலிருந்து விடுபடுவதற்காக துணிந்து செயற்படுவோம். நமது பெண் பிள்ளைகளை நன்றாகப் படிப்பிப்போம். கல்லிலும் மண்ணிலும் செலவு செய்யும் பணத்தை அவர்களின் கல்விக்காக செலவு செய்வோம். பெண்பிள்ளைகளின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் காலம் இது எனவே நாம் பெண்மக்களின் கல்வி விடயத்தில் உறுதுணையாயிருப்போம்.




நாம் நமது வியர்வையைச் சிந்தி உழைத்து கட்டி முடித்த வீட்டில் நாம் வாழ்வதில்லையா? நாம் ஆட்சி செய்வதில்லையா? மருமகனார் வந்து ஒரு மாதத்தில் அவ்வீட்டில் நமக்கு வசிக்க முடியாமல் மற்றப் பிள்ளைகளுடன் செத்தைக்குள் செல்வதா? இது என்ன அவல நிலை. நாம் உழைத்துக் கட்டிய வீட்டில் நாம் தான் வாழ வேண்டும். ஒரு ஆண் மகன் தன் வாழ்நாளில் ஒரு வீட்டைத்தான் கட்டுவது. அது அவனது வாழ்க்கைக்காக உருவாக்கும் வீடு அது; உருவாக்கி தன் வாழ்க்கைத் துணைக்காக பொருத்தமான பெண்ணை மஹர் கொடுத்து கைபிடிப்பதைத்தான் இஸ்லாம் சொல்கிறது. ஆனால் நாமும் நமது ஆண் மக்களை தன் பெண் மக்களுக்கான உழைக்கும் இயந்திரமாக ஆக்கி, அவனது வாழ்வை நாசப்படுத்தி, வாழும் காலத்தை வீணடித்து விட்டு இழுக்க முடியா எருதை கசாப்புக் கடக்காரனுக்கு விற்பதை விட மோசமான நிலையில் தள்ளி விடுகின்றோம். இதன் மூலம் தன் மகனின் வாழ்வை நாசப்படுத்தியது மட்டுமன்றி, இன்னுமொரு இளம் பெண்ணின் பொன்னான வாழ்க்கைக்கும் தீமூட்டுகின்றோம்.

மணவாளனாய் செல்லவேண்டிய நமது மகன் உழைத்து ஓடாகி, ஒரு அசையும் சவமாக அடுத்தவன் வீட்டு வாசலில் கட்டப்படும் வெட்கமான வியாபாரத்தை நிறுத்துவோம். மடமைச் சிந்தனைகளையும், ஊதாரிக் கொள்கைகளையும் ஒதுக்கி விட்டு மனிதப் பண்புகளைக் கொண்ட உண்மை மனிதர்களாக மாறுவோம். அல்லாஹ் நமக்கு பேரருள் புரிவானாக.

முன்னோர்களின் மூடத்தனமான பாரம்பரிய நடைமுறைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்போம். நமது பிள்ளைகளின் வழமான எதிர்காலத்திற்கு இன்றே வழி சமைப்போம். யார் இதை ஆரம்பிப்பது? யார் இதைச் செய்வதற்கு துணிவது? என்ற விடையில்லா வினாக்களை ஓரம் தள்ளி விட்டு ஒவ்வொரு தந்தையும், ஒவ்வொரு தாயும், ஒவ்வொரு இளைஞனும், ஒவ்வொரு யுவதியும் உடனடியாகக் களமிறங்குவோம்.

இப்பிரச்சினைக்கு தீர்வேற்படுமானால் ஏனைய அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு தானாகவே பிறந்து விடும். அல்லாஹ் யாவற்றையும் அறிந்தவனாக இருக்கிறான்.

எங்களின் எதிர்கால இளைஞர் சமூகமே!

பரம்பரை பரம்பரையாக எமது முன்னோர்களின் பாரம்பரிய நடைமுறைகள் என்று கடைப்பிடித்து வந்த எத்தனையோ மூட சிந்தனைகளைப் புறந்தள்ளி விட்டிருக்கும் இந்நிலையில், விரும்பியோ விரும்பாமலோ அடுத்தவன் உழைப்பில் வாழும் பகல் கொள்ளை நாடகங்களான இத்திருட்டு வித்தைக்கு மட்டும் சம்பிரதாய அங்கீகாரம் வழங்கி வாழும் வெட்கத்தனமான நிலையில் இருந்து விடுபடுவதற்கு நீங்கள் துணிவுடன் செயற்பட வேண்டிய காலம் நெருங்கி வந்து விட்டது.

பூட்டன், பீட்டன், கொப்பாட்டன், பாட்டன் என்று சேர்த்து வைத்த அத்தனையையும் ஒரு செக்கனில் எம்மை எதிர்கொண்ட சுனாமி அழிவை சிந்தித்துப் பாருங்கள். எம்முடன் இறுதியில் வரப்போவது எது என்பதை இந்நிகழ்வைக் கொண்டே நாம் அறிந்து கொள்ளலாம்.

எனவே இப்புனிதப் புரட்சியை உங்களைப் போன்ற இளைஞர்களால் மட்டுமே முன்கொண்டு செல்ல முடியும் என்பதே சமகால நிலமையாகும். எனவே சிந்திக்கத் துணிந்த இளைஞர்களாகிய நீங்கள் தாமதிக்காது உடனடியாக களமிறங்கி செயற்படுவதன் மூலம் எத்தனையோ ஏழை யுவதிகளுக்கு வாழ்வளிக்க முடியும் என்பது மட்டுமல்லாமல், உங்களது அன்புத் தாய் தந்தையான எங்களை அடுத்தவன் சொத்தை அபகரித்த அல்லது கொள்ளையடித்த பாவத்தில் நின்றும் காப்பாற்றி, எங்களுக்கு சுவர்க்கம் கிடைப்பதற்கான பாதையும் ஏற்படுத்திய நன்மை உங்களுக்குக் கிடைக்கும்.

எனவே நீங்கள் பெற்றோர்களாகிய எங்களது மறுமை ஈடேற்றத்திற்காக இந்தக் கொள்ளையை எதிர்த்து போராடுங்கள். இப்போராட்டத்தை எதிர்க்க நினைக்கும் அப்பாவியான எங்களில் சில பெற்றோர்களின் மறுமை ஈடேற்றத்திற்கான ஜிஹாத் களமாக இப்போராட்டக்களத்தை கொண்டு செல்லுங்கள். நீங்கள் எத்தனையோ தடவைகள் துண்டுப் பிரசுரங்கள் மூலமும், புத்தக வடிவிலும், மேடைப்பேச்சுகளிலும், குத்பாக்களிலும், உங்களது பெற்றோர்களாகிய எங்களை திருத்த முயற்சி செய்திருக்கிறீர்கள். நாங்கள் திருந்தவில்லை. நாங்கள் திருந்தாத பாவிகளாகிவிட்டோம். மன்னிப்புக் கேட்கிறோம். மீண்டு மன்னிப்புக் கோருகின்றோம். இஸ்லாம் கூறிய படி சொத்துக்களைப் பிரித்து வழங்காமையால் தான் எமது வாரிசுரிமை மீறப்பட்டு விட்டது. அதனாலேயே இன்று அடுத்தவன் சொத்தை அபகரிக்கும் ஹறாமான வழிமுறைகளுக்கு அடிமையாகி விட்டோம். அது மட்டுமன்றி நாங்கள் மார்க்கத்திற்கு முரணாக சொத்துக்களைப் பிரித்தமையால் எங்கள் உழைப்பில் எங்களுக்கு ஹஜ் செய்யக் கூடிய வாய்ப்புக் கிடைக்கவில்லை.

நாங்கள் அடுத்தவன் சொத்தைக் கொள்ளையடித்து உங்களிடம் விட்டுவிட்டுச் சென்றுவிடுவோம். அந்த ஹறாத்தை அத்திவாரமாக கொண்டு உருவாக்கப்படும் சந்ததிகளும், சொத்துக்களும் ஹறாமானவையே. அதனால் எல்லா ஹறாம்களும் ஒன்று சேர்ந்து பெரும்பாவிகளாக நீங்களும் எங்களுடன் மறுமையில் எழுப்பப்படுவீர்கள் அவ்வேளை நாங்களோ, அல்லது இவ்ஹறாத்தில் வாழ்வதற்கு உடன்பட்ட சகோதரர்களோ, சகோதரிகளோ நியாயம் சொல்ல வரப்போவதில்லை. நீங்கள் தனித்தே உங்களுக்காகப் போராட வேண்டும். ஒரு செக்கனில் நடந்த சுனாமி அழிவின் போது மனைவி என்றோ, மக்கள் என்றோ, தாய் என்றோ, தந்தையென்றோ பாராது நான் மட்டும் எப்படி உயிர் காப்பேன் என்று ஓடினோமோ, அதைவிட மஹ்ஸர் எப்படி இருக்குமென்று நினைத்து செயல்பட்டாலே போதுமானதாகும். அல்ஹம்துலில்லாஹ்!

எங்களின் எதிர்கால இளைஞர்களே! நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள் ஒரு வீட்டுக்கும் அடுத்தவன் உழைத்த சொத்துக்கும் ஆசைப்பட்டால் ஒன்பது வீடும் ஒன்பது கொள்ளையும் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு விடலாம். இது நாங்கள் அனுபவத்தில் கண்ட உண்மை. நாங்கள் செய்த தவறை நீங்களும் செய்து விடாதீர்கள்.

நாங்கள் அறிந்தோ அறியாமலோ செய்த இத்தவறுகளுக்கு அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரி பிரார்த்திப்போம்! பெற்றோர்களாகிய எங்களை மேலும் தவறு செய்யாமல் காப்பாற்றுங்கள். அல்லாஹ் நம்மனைவரையும் நேரான பாதையில் செலுத்துவானாக ஆமீன்.

முஸ்லிம் தேசமும் எதிர்காலமும்

முஸ்லிம் அரசியலில் ஆர்வம் கொண்டவர்கள் வாசித்தறிய வேண்டிய அவசியமான ஆவணம்! புத்தகம் தேவைப்படுவோர், முஸ்லிம் குரல் ஆசிரியர் பீடத்துடன் தொடர்பு கொள்ளலாம்!



தபாலில் அனுப்பிவைக்கப்படும்!

விலை 200/=

- Advt -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரூந்தில் பெண்கள் படும்பாடு!

அலுவலகம் கல்லூரி, பாடசாலைகள் என வெளியே செல்லும் பெண்களுக்கு பிரச்சினைகள் உண்டு, அவற்றுள் முக்கியமானது பஸ் பயணம், வேலை நேரங்களில் ஏற்படும் நெரிசல்களைப் பயன்படுத்தி.

அவசர புத்தியுடைய சில ஆண்களின் சேஷ்டைகளால் பாதிக்கப்படும் பெண்கள் அநேகம் பேர்.



ஆண்கள் நடுவில் அரை மணி நேரமோ, ஒரு மணிநேரமோ பயணித்து தனக்குரிய நிறுத்தம் வரும்வரை அப்பெண் படுகிறது அவஸ்தை இருக்கிறதே...! இந்த மனிதர்கள் இன்னும் கண்ணியத்தை கற்கவில்லை என்றே தோன்றுகிறது. இன்னும் சில ஜாம்பவான்கள் பஸ்ஸினைத் துரத்திப்பிடித்தும், படிக்கட்டு நுனியில் நின்று கொண்டு பயணம்செய்வதும், இருக்கைகளில் உள்ள பெண்களிடம் கதை கொடுப்பதும் போன்ற செயற்பாடுகளால், ஆண்கள் தங்கள் மதிப்பினை நன்றாகவே கீழிறக்கிக் கொள்கின்றனர்.

சரி இதற்கு பெண்கள் செய்ய வேண்டியது ஏதாவது உண்டா என ஆராய்ந்தால், முதலில் பெண்கள் தாறுமாறாய் உடை அணிவதை நிறுத்துங்கள்! நிறைய பெண்கள் இப்பொழுது ரவிக்கையின் பின் புறத்தில் ஜன்னல் வைத்து கொள்கிறார்கள். இன்னும் சிலர் கண்ணாடி வேறு பதித்துக்கொள்கிறார்கள். மிடி டாஸ்ப், ஸ்கட்ஸ் என நாகரிகம் வளர வளர உடைகள் குறைய ஆரம்பித்து விட்டது.

கண்ணியமாக உடைஅணிவது பார்ப்பவர்களின் பார்வையை கண்ணியப்படுத்தும். உங்கள் மனதில் எதுவும் இல்லை தான். ஆனால் மற்றவர்கள் அப்படி இல்லையே!

அலட்சியமான பார்வை, நடையெல்லாம் தவிர்த்து இயல்பாய் இருங்கள். தேவையில்லாதவர்களிடம் தேவையில்லாததையெல்லாம் பேசாதீர்கள். அறிமுகமில்லாத அந்நிய ஆண்களிடம் பேசுவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். ஆண்களே தங்களின் தாய் சகோதரிகளை நினைத்துப் பாருங்கள்!

**பாரூக் றினோசா - கந்தளாய்.**

---




அத்தியாயம் 15

48

'அதுமட்டுமல்ல, முத்துமுகம்மது இழந்த மூன்றாவது விரல், மோதிர விரல், திருமண மோதிர விரல்... அதற்கும் விரைவில் ஒரு பரிசு கொடுக்க தலைமைத்துவம் தீர்மானித்துள்ளது'

சேர், டோன்ட் மிஸ் அண்டர்ஸ்டான்டிங் மி. ஐ ஸ்ட்ரோங்லி ஒப்ஜெக்..ற்..த...'

'மிஸ்டர் ஹுசைன் பாறுக்? ப்ளீஸ் கொய்ற். நெய்னார்!'

'சேர்.... கலியான மோதிரமா சேர்?'

'ஆம்! அந்த மூன்று பரிசுடன் எனது கடமை முடிகிறது. மிஸ்டர் ஹுசைன்பாறுக்! நெய்னார்!! முத்துமுகம்மது முதல் முறையாக எனது வாசலுக்கு வந்தது, தான் இழந்த தனது காதலியை மீட்டுத் தரும்படி கேட்டுத்தான். அவனை வெறுங்கையுடன் திருப்பியனுப்புவது தலைவருக்கு அழகல்ல... மிஸ்டர் ஹுசைன்பாறுக்..! 'கண்ணன் என் சேவகன்..' என்ற பாரதி பாடல் கேட்டிருக்கிறீங்களா?'

'ப்ளீஸ் நோ சேர்!'

'... எங்கிருந்தோ வந்தான்... என்ற பாடல் அது. பாரதிக்கு ஒரு கண்ணன். தலைவருக்கு முத்துமுகம்மது. மிஸ்டர் ஹுசைன் பாறுக்! என். ஏ. தீரனின் 'வல்லமை தாராயோ..' வாசித்திருக்கிறீங்களா?'

'நோ.. ப்ளீஸ் சேர்!'

'விந்தையை இழந்த முத்துமுகம்மது என்னையே தனது தந்தையாக வரித்துக் கொண்டவன்.. அவனுக்கு திருமணம் செய்து வைப்பது தந்தையின் கடமைதானே... என்ன நெய்னார்?'

'ஓம் சேர்! கொறுக்கா ஒங்கடா மகன்தான் சேர்!'

'பெண்ணையும் தீர்மானித்து விட்டேன்'

என்றார் தலைவர் அதிரடியாக. பளீரென நிமிர்ந்தான் முத்துமுகம்மது அதிர்ச்சி உயிர் வரை உலுக்கியது. தலைவர் அவனை மர்மப் புன்னகையுடன் பார்த்து-

'மணப்பெண் யார் தெரியுமா முத்துமுகம்மத்?'

'..........................................'


'மைமுனா!'

'..........................................'

'மைமுனா!' என்றார் தலைவர் மறுபடி.

'சே.....ர்'

'இன்ஸா அல்லாஹ்! இது விரைவில் நடக்கும். அதுதான் தலைவரின் மூன்றாவது பரிசு. மிஸ்டர் ஹுசைன் பாறுக்! ப்ளீஸ் எக்ஸ்பிளைன் எபவ்ட் ப்ரெஸ் மீற்றிங் டு ஹிம்! சரி, நாளை சந்திப்போம்!'



தலைவர் விரைவாக நடந்தார் கம்பீரமாக மூவரும் செய்வதறியாது திகைத்து சிலிர்த்திருந்தனர்!

என்னால இப்பயும் நம்ப ஏலுதில்லடா.. தலவரு சென்னதெல்லாம் மெய்தானாடா...நீ. எம்பி யாடா... கொறுக்காட பேயன் எம்பியாடா?'

'நானென்டாப் போல நம்பினயா... எல்லாம் காட்டவ்லியா அப்பாட கிருப'

'என்ன பெரிய பதவிடா இது... எங்கயோ கெடந்த பீக் கொறுக்கா எம்பி! என்ன 'கொதறத்து' ரா இது! டெலிபோனுல தாடி மாஸ்டருட்ட சென்னன். லோங்கிஸீக்குள்ள குசிப் பறந்த சத்தம் ஞ்ச கொளும்புல கேட்டிச்சிரா முத்தும்மது...ந்தரம் நம்முட ஊரு அமளிதுமளிப்படும்...'

'அத்ஸரி! டே பொட்டக் கண்ணா.. ஏண்டா திடிருண்டு வந்த?' தலவருட்ட என்ன கோள் மூட்டின? மைம்னாட கத அவருக்கு ஆரு சொன்ன..?'

'மைம்னாட கெஸற்ற குடுக்கத்தானே நான் வந்த; ப்ப ஒண்ட மைம்னாட கெஸற்று தலவர்ர கையில...'

'செருப்படி நாய...' – முத்துமுகம்மது திடுக்கிட்டுப் போய் எழுந்து திடீரென நெய்னாரின் சேர்ட்டைப் பிடித்து இழுத்து அறைந்... நெய்னார் அவனது கைகளை தடுத்து,

'டெ.. டெ.. பேக்கொறுக்கா..! மொட்டுக் கையா.. வெரல் ல்லாம சேமனா இரிந்தாய்.. ப்ப கைல முறிச்சனென்டா கையில்லாத சொத்தி எம்பி ஆவாய்.. முதல்ல, நடந்த என்னண்டு கேளன்டா பேயா!'

'..........................................'

'நீ தாடிக்கு டெலிவோனுல 'கெஸட்டு' வெஸயம் சென்னதும், தாடி 'ரூம்' தொறப்பு 'ல்லை' ண்டு சொல்லிட்டாரு.. உடுவனா நான்? தாடிய முலைக்க வெச்சி சாத்துச் சாத்தினதும் 'டூப்ளிக்கட்டு' தொறப்பு வந்திட்டது...'

'அட பொட்டயா... அடிச்சிட்டயாடா அவருக்கு..?'

(தொடரும்...)




முஸ்லிம் குரல் பத்திரிகை நமது மக்களின் இழப்புகளை ஆவணப்படுத்தி, முஸ்லிம் தேச ஆவணக் காப்பகத்தினூடாக தொகுத்து வருவதை அறிந்திருப்பீர்கள். எமது இந்த முயற்சிக்கு நமது மக்கள் மத்தியிலிருந்து பெருமளவு ஆதரவும், ஆவணங்களும் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன.

இத்தகவல்களை நமது மக்களுக்கு பகிரங்கப்படுத்தும் நோக்கில் மக்கள் பத்திரிகை என்ற வகையில் இத்தொடர் எழுதப்படுகிறது. எமக்கு கிடைத்த விபரங்களின் எண்வரிசைப்படி இங்கு பட்டியல்படுத்தப்பட்டுள்ளது.




கியாத் மாமிசா முகம்மது தஸ்லீம்
ஜாயா வீதி, ஜாயா நகர், மூதூர் -04
பிறந்த திகதி : 02.03.1964
சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும: 14.02.2000ல் ஜாயா வீதி, மூதூரில் வைத்து எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகளால் சுடப்பட்டு மரணம்.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 556

---




சீனி வாப்பு தன்சூர்
5ஆம் வட்டாரம் பூவரசத்தீவு கிண்ணியா
பிறந்த திகதி : 11.06.1971
சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும் : 26.09.1990ல் எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகளால் புதைக்கப்பட்டிருந்த மிதி வெடியில் சிக்குண்டு முழங்காலுக்கு கீழ் துண்டிப்பு

---




ஆதம் பாவா அவ்வாப் பிள்ளை
என்.எம். வீதி, காங்கேயனோடை -13
பிறந்த திகதி : ---
சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும் : 23.10.1988ல் காங்கேயனோடையில் வைத்து இந்திய இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணம்.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 1030

---




முகம்மது முஸ்தபா அஷ்ரஃப் கான்
166ஏ, பாவா லேன், புதிய காத்தான்குடி -06
பிறந்த திகதி : 20.11.1969
சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும் : 03.08.1990ல் காத்தான்குடி மீரா ஜும்ஆ பள்ளிவாயலில் வைத்து எல்.ரி.ரி.ஈ. பயங்கர வாதிகளால் நிகழ்த்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மரணம்.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 5633

---




அபூபக்கர் கப்புடையார்
காட்டாஸ்பத்திரி, பேசாலை
பிறந்த திகதி : 20.07.1966
சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும் : 01.07.1986ல் பேசாலைக் கடலில் வைத்து மீன் பிடிக்கச் சென்றபோது இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணம்.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 143

---

258

258. முஹம்மது ஹனீபா சயீம்
பால நகர், மூதூர் -02
பிறந்த திகதி : 15.02.1966
சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும் : மூதூர் பிரதான வீதியில்வைத்து எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகளால் நிகழ்த்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மரணம்.
மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 1580

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

صوت المسلم
முஸ்லிம் குரல்
MUSLIM KURAL
'சுயநிர்ணயத்துடன் கூடிய முஸ்லிம்களின் கௌரவமிக்க சமத்துவமான வாழ்விற்கு'

# தரவுகளைத் தேடித் தொகுத்து விட்டோம்!

## பாதிக்கப்பட்ட மக்களுக்கான இழப்பீட்டினை யார் போராடிப் பெறுவது?

தமிழ் மரபுத் தொடர் அகராதியில்; வாயில்கொழுக்கட்டையா? என்ற மரபுத் தொடருக்கு உரை எழுதியுள்ள உரையாசிரியர்கள் பின்வரும் விளக்கத்தினை தருகின்றனர். கேள்வி கேட்க வேண்டிய அல்லது பதில் சொல்ல வேண்டிய நேரத்தில் மௌனம் சாதிப்பவர்கள் மீது ஏற்படும் எரிச்சலை வெளிப்படுத்தப் பயன்படுத்தும் மரபுத் தொடர் இது என்கின்றனர். இதனடிப்படையில் நமது அரசியல் தலைமைகளின் வாயில் இன்றும் அன்றும் என்றும் முஸ்லிம் சமூகத்திற்கு நியாயம் கேட்கும் விடயத்தில் கொழுக்கட்டைதான் உள்ளது.

சமகால இலங்கை அரசியலில் பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்தும் எத்தனம் முதன்மையும் முக்கியத்துவமும் பெற்றுள்ளது. நாட்டின் தேசிய அரசியலை ஆட்டம் காணச் செய்யும் வகையில் பெரும் அலையை ஏற்படுத்தியுள்ள இந்த விடயத்தினையிட்டு; கடற்கோளினால் அதிகம் பாதிப்படைந்துள்ள முஸ்லிம்களாகிய நாம். நமது அதிக கவனக்குவிப்பையும்; அக்கறையையும் செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம்!

பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்த வேண்டுமெனக் கோரும் விடுதலைப் புலிகள். கடற்கோள் அனர்த்தம் வடக்கு கிழக்கிலேயே அதிக பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது என்றும்; இலங்கை அரசாங்கத்தின் திட்டமிட்ட புறக்கணிப்பு வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் உறுதிப்படுத்தப்பட்டு வருகிறதென்றும்; வடக்குக் கிழக்குப் பிரதேசத்தின் கடற்கோள் அனர்த்த முகாமைத்துவத்தையும். அதற்கான அதிகாரத்தையும் விடுதலைப் புலிகளிடம் வழங்கவேண்டுமெனவும் தனது வாதத்தை முன் வைத்து வருகிறது.

விடுதலைப் புலிகளினது இத்தகைய வாதமானது. சர்வதேச சமூகத்தின் முன் விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு ஆதரவான நிலையைத் தோற்றுவித்திருப்பதுடன். இலங்கை அரசாங்கத்தை வேறு வழியில்லாது பொதுக்கட்டமைப்பு பொறி முறையை அமுல்படுத்துவதற்கான நிர்ப்பந்தத்தை இன்று ஏற்படுத்தி உள்ளது.

விடுதலைப் புலிகளின் கோரிக்கையும். அரசாங்கத்தின் நிலைப்பாட்டிற்குமிடையில். இன்று கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள். தமது மீள்கட்டுமாணம். புனரமைப்பு. மறுவாழ்வு தொடர்பாக மட்டுமன்றி; தமது ஸ்திரமான சமூக. அரசியல் இருப்புக்குறித்தும் மிகப்பெரும் அச்சத்தை எதிர்கொள்ள வேண்டி வந்துள்ளது.

முதலில் விடுதலைப் புலிகள் முன்வைக்கும் வாதத்தினையிட்டு உண்மை நிலையினை தெளிவுபடுத்துவது முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவசியமானது!

* கடற்கோள் அனர்த்தம் வடக்கு கிழக்கு பிரதேசத்தையே அதிகம் பாதித்துள்ளது.
* இலங்கை அரசாங்கத்தின் திட்டமிட்ட புறக்கணிப்பு வடக்குக் கிழக்கில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
* வடக்கு கிழக்கு பிரதேசத்தின் அனர்த்த முகாமைத்துவ அதிகாரத்தை விடுதலைப் புலிகளிடம் கையளிக்க வேண்டும்!

முதல் இரு காரணங்களையும் விடுதலைப் புலிகள் பொதுவான ஒரு அம்சமாக முன்வைத்து. அவ்விரு காரணங்களின் பொதுத்தன்மையின் ஊடாக மூன்றாவது நிலைப்பாட்டிற்கான ஆதரவுத்தளத்தினை சர்வதேச ரீதியாக கட்டியெழுப்பி உள்ளனர். புலிகளின் இந்த நுட்பமான பிரச்சாரத்தினை முதலில் முஸ்லிம் சமூகம் கட்டுடைத்து இருக்க வேண்டும்! அதனூடாக மூன்றாவது விடயத்தில் வடக்குக் கிழக்கின் அனர்த்த முகாமைத்துவ அதிகாரத்தினை விடுதலைப் புலிகளின் வசம் மாத்திரம் கையளிக்க முடியாது என முஸ்லிம்கள்

| அம்பாறை மாவட்டம் | |
|---|---|
| உயிரிழப்பு | 7258 |
| இடம்பெயர்ந்திருந்து வாழ்வோர்/குடும்பம் | 14353 |
| காணாமல் போனோர் | 1069 |
| முற்றாகப்பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் | 14635 |
| பகுதியளவில் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் | 5276 |
| கல்வியில் ஏற்பட்ட பாதிப்புகள் | 21 |
| சுகாதார கட்டுமானத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் | 05 |
| பாதிக்கப்பட்ட பள்ளிவாசல், மத்ரஸாக்கள் | 36 |

| மட்டக்களப்பு மாவட்டம் | |
|---|---|
| உயிரிழப்பு | 110 |
| இடம்பெயர்ந்திருந்து வாழ்வோர்/குடும்பம் | 4723 |
| காணாமல் போனோர் | 94 |
| முற்றாகப்பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் | 2304 |
| பகுதியளவில் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் | 3259 |
| கல்வியில் ஏற்பட்ட பாதிப்புகள் | 06 |
| சுகாதார கட்டுமானத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் | 02 |
| பாதிக்கப்பட்ட பள்ளிவாசல், மத்ரஸாக்கள் | 22 |

| திருகோணமலை மாவட்டம் | |
|---|---|
| உயிரிழப்பு | 808 |
| இடம்பெயர்ந்திருந்து வாழ்வோர்/குடும்பம் | 17162 |
| காணாமல் போனோர் | 215 |
| முற்றாகப்பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் | 2647 |
| பகுதியளவில் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் | 3245 |
| கல்வியில் ஏற்பட்ட பாதிப்புகள் | 12 |
| சுகாதார கட்டுமானத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் | 03 |
| பாதிக்கப்பட்ட பள்ளிவாசல், மத்ரஸாக்கள் | 39 |

| அம்பாந்தோட்டை மாவட்டம் | |
|---|---|
| உயிரிழப்பு | 3800 |
| இடம்பெயர்ந்திருந்து வாழ்வோர்/குடும்பம் | 1171 |
| காணாமல் போனோர் | 444 |
| முற்றாகப்பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் | 1091 |
| பகுதியளவில் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் | 11 |
| கல்வியில் ஏற்பட்ட பாதிப்புகள் | 02 |
| சுகாதார கட்டுமானத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் | - |
| பாதிக்கப்பட்ட பள்ளிவாசல், மத்ரஸாக்கள் | 02 |

| மாத்தறை மாவட்டம் | |
|---|---|
| உயிரிழப்பு | 74 |
| இடம்பெயர்ந்திருந்து வாழ்வோர்/குடும்பம் | 907 |
| காணாமல் போனோர் | 24 |
| முற்றாகப்பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் | 344 |
| பகுதியளவில் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் | 17 |

| காலி மாவட்டம் | |
|---|---|
| உயிரிழப்பு | 490 |
| இடம்பெயர்ந்திருந்து வாழ்வோர்/குடும்பம் | 3228 |
| காணாமல் போனோர் | 125 |
| முற்றாகப்பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் | 677 |
| பகுதியளவில் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் | 340 |
| கல்வியில் ஏற்பட்ட பாதிப்புகள் | 01 |
| சுகாதார கட்டுமானத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் | - |
| பாதிக்கப்பட்ட பள்ளிவாசல், மத்ரஸாக்கள் | - |

| களுத்துறை மாவட்டம் | |
|---|---|
| உயிரிழப்பு | 18 |
| இடம்பெயர்ந்திருந்து வாழ்வோர்/குடும்பம் | 94 |
| காணாமல் போனோர் | 04 |
| முற்றாகப்பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் | 42 |
| பகுதியளவில் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் | 13 |
| கல்வியில் ஏற்பட்ட பாதிப்புகள் | 01 |

| கொழும்பு மாவட்டம் | |
|---|---|
| உயிரிழப்பு | 04 |
| இடம்பெயர்ந்திருந்து வாழ்வோர்/குடும்பம் | 33 |
| காணாமல் போனோர் | 05 |
| முற்றாகப்பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் | 11 |
| பகுதியளவில் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் | 46 |

தமது நிலைப்பாட்டினை முன் நிறுத்தி இருக்க வேண்டும்! இந்த விடயத்தில் முஸ்லிம் அரசியல் தலைமைகள் தொடக்கம் சிவில் சமூகப் பிரதிநிதிகள் வரை மௌனமாக இருந்து விட்டனர். உண்மையில் வடக்கு கிழக்கு பிரதேசத்தில். கடற்கோளினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வை மீளக்கட்டியெழுப்புவதற்கு ஆதாரத் தளமாக பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதாக இருந்தால்; பொதுக்கட்டமைப்பின் கணிசமான அதிகாரமும். நிதி உதவிகளும் முஸ்லிம் பிரதேசங்களுக்கே வழங்கப்பட வேண்டும்! இதுதான் யதார்த்தமானது. இதற்கான ஆதாரங்களை இன்று முஸ்லிம் சமூகம் தொகுத்துள்ளது.




கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை தழுவிய ரீதியிலோ. வடக்கு கிழக்கு மட்டத்திலோ நிவாரணம் வழங்குவதற்காக பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்த சர்வதேச சமூகமோ. இலங்கை அரசோ முன்வந்தால். அத்தகைய பணியில் முஸ்லிம் சமூகத்திற்கே முதலில் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்! ஏனெனில் தேசிய ரீதியாக மொத்த உயிரிழப்பில் 40 வீதத்திற்கும் அதிகமான உயிரிழப்பினையும். மொத்த இடப் பெயர்வில் 32 சதவீதமான பாதிப்பினையும் அனுபவித்தவர்களாக முஸ்லிம்கள் உள்ளனர். இதே போல்தான் உடைமை அழிவிலும் முஸ்லிம்கள் 33 சதவீதத்திற்கும் அதிகமான இழப்பினைச் சந்தித்து உள்ளனர். வடக்கு கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை 60 சதவீதமான அழிவினைச் சந்தித்தவர்களாக முஸ்லிம்கள் உள்ளனர். 60 சதவீதமான அழிவினை எதிர்கொண்ட முஸ்லிம்களை புறம் தள்ளி. வடக்குக் கிழக்கில் ஏற்படுத்தப்போகும் பொதுக்கட்டமைப்பில் விடுதலைப் புலிகளுக்கும். தமிழர் பிரதேசத்திற்கும் முன்னுரிமை வழங்குவது எந்தவகையில் நியாயமானது என்பதை, சர்வதேச சமூகமும். இலங்கை அரசாங்கமும் முதலில் முஸ்லிம்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்!

விடுதலைப் புலிகளும். இலங்கை அரசாங்கமும் பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்று மட்டுமே கூறிக்கொண்டு வருகிறதே தவிர. இத்தகைய பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு என்ன அதிகாரம்? முஸ்லிம் பிரதேசங்களுக்கான நிதி ஒதுக்கீடு. அதன் வேலைத்திட்டம் பற்றி வெளிப்படையாகப் பேசுவதை தவிர்த்தே வருகின்றன. பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அரசாங்கத்திலுள்ள முஸ்லிம் தலைமைகளின் நிலைப்பாடோ. எதிர்க்கட்சியிலுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடோ. வெறும் ஊடக அறிக்கைகளைத் தாண்டி வெளிப்படுத்தப்படவில்லை.

முஸ்லிம் தகவல் நிலையம் தற்போது தொகுத்து வெளியிட்டுள்ள கடற்கோள் அனர்த்தத்தின்போதான முஸ்லிம்களின் இழப்பு பற்றிய ஆவணம். முஸ்லிம்களுக்கு நிகழ்ந்துள்ள இழப்பின் துயரை வெளிப்படுத்துகிறது. கடற்கோள் விபத்தின்போது பெருமளவில் விபத்துக்குள்ளான முஸ்லிம் சமூகத்திற்கு முன்னுரிமை அளித்து சிகிச்சைஅளிக்காது. விபத்தின் போது முஸ்லிம் சமூகத்தை விட குறைந்தளவில் பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்தை முன்நிறுத்தி சிகிச்சையளிக்க முயற்சிப்பது. மனிதாபிமானத்தை நிராகரிப்பது மட்டுமன்றி. முஸ்லிம் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் மீறும் அப்பட்டமான செயல் என்பதை சர்வதேச சமூகமும் உள்நாட்டு சக்திகளும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்!

கடற்கோள் அனர்த்தத்தின் போது முஸ்லிம்களுக்கு நிகழ்ந்துள்ள இழப்பின் உண்மைத் தரவுகளை சர்வதேச அளவிலும் தேசிய அளவிலும் பரப்புரை செய்ய வேண்டிய பொறுப்பு முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்கும். முஸ்லிம் சமூக சக்திகளுக்கும் தவிர்க்க முடியாத ஒரு பணியாகியுள்ளது. கடற்கோளினால் பாதிக்கப்பட்ட தமிழர் பிரதேசத்தை. தமிழ் மக்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதற்கு விடுதலைப் புலிகளிடம் பொதுக்கட்டமைப்பு அதிகாரத்தை வழங்குவதையிட்டு எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால் வடக்கு கிழக்கை தனிப் பிராந்தியமாகக் கொண்டு. முஸ்லிம்களின் இழப்புகளை மூடி மறைத்து. முஸ்லிம் சமூகத்தை விடுதலைப் புலிகளின் அதிகார ஆதிக்கத்தின் கீழ் முடக்குவதற்கு அரசாங்கமும் சர்வதேச சமூகமும் முயலக்கூடாது! இத்தகைய கபடத்தனத்திற்கு முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஒருபோதும் துணை போகவும் கூடாது! இதுவே எமது உறுதியான நிலைப்பாடு.

**தோழமையுடன்**
**பிரதம ஆசிரியர்**

தொடர்புகளுக்கு -
Chief Editor - Muslim Kural
119/15, Kittampahuwa Road, Viviyan Gunawardena
Mawatha Wellampitiya - Sri Lanka
Tel : 077 3131627 Fax : 0114 618979
E-mail - muslimkuralsl@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org